KEMENTERIAN PELAJARAN MALAYSIA

**KURIKULUM BERSEPADU SEKOLAH MENENGAH**

இடைநிலைப் பள்ளிகளுக்கான

# இலக்கண இலக்கிய விளக்கவுரை

**BUKU PANDUAN TATABAHASA DAN CEYYUL BAHASA TAMIL KBSM**

Unit Bahasa Tamil
Bahagian Pembangunan Kurikulum
2008

# KATA PENGANTAR

Saya mengucapkan syabas dan tahniah kepada Unit Bahasa Tamil, Bahagian Pembangunan Kurikulum yang telah memurni dan memantapkan Buku Panduan Tatabahasa dan Ceyyul KBSR dan KBSM yang dihasilkan pada tahun 2003. Bahagian Pembangunan Kurikulum telah mengambil keputusan untuk menyeragamkan definisi dan maksud tatabahasa dan ceyyul yang terdapat dalam Sukatan Pelajaran. Keseragaman ini amat penting supaya tidak timbul sebarang keraguan kepada guru dan pelajar.

Saya difahamkan buku ini meliputi kesemua aspek tatabahasa dan ceyyul yang terdapat dalam Sukatan Pelajaran Bahasa Tamil. Buku Panduan ini juga mengandungi definisi dan penerangan yang tepat bagi setiap aspek tatabahasa dan ceyyul. Contoh-contoh yang diberi adalah releven dan tepat. Diharap buku panduan ini akan berfungsi sebagai bahan rujukan utama kepada pihak Lembaga Peperiksaan Malaysia untuk menghasilkan soalan-soalan yang berkaitan dengan tatabahasa dan ceyyul. Buku ini juga akan menjadi sumber rujukan utama para guru dan pelajar.

Saya juga ingin merakamkan penghargaan kepada semua ahli jawatankuasa Buku Panduan Tatabahasa dan Ceyyul yang terdiri daripada pegawai-pegawai Bahagian Kementerian Pelajaran Malaysia, pensyarah-pensyarah universiti dan institut perguruan serta guru-guru yang berpengalaman yang telah memberi sumbangan untuk memurni dan memantapkan buku ini.

HAJI ALI BIN AB. GHANI AMN
Pengarah
Bahagian Pembangunan Kurikulum
Kementerian Pelajaran Malaysia

# PRA KATA

Buku Panduan Tatabahasa dan Ceyyul merupakan satu dokumen yang dihasilkan oleh Unit Bahasa Tamil, Bahagian Pembangunan Kurikulum pada tahun 2003 dalam membantu para guru, pelajar dan juga Lembaga Peperiksaan Malaysia untuk memahami dengan lebih jelas segala aspek tatabahasa dan ceyyul yang terdapat dalam Sukatan Pelajaran.

Saya mengucapkan tahniah kepada Unit Bahasa Tamil dan para penulis yang telah menyumbang tenaga dan idea untuk memurni dan memantapkan buku ini. Diharap buku ini akan membantu guru-guru dalam proses pengajaran dan pembelajaran. Saya difahamkan terdapat banyak tafsiran yang berbeza dalam buku-buku tatabahasa dan ceyyul yang ada di pasaran pada masa kini. Bagi tujuan memantap dan memberikan penerangan yang jelas dan tepat kepada aspek-aspek tatabahasa dan ceyyul, pihak Unit Bahasa Tamil Bahagian Pembangunan Kurikulum dengan bantuan para pensyarah universiti dan institut perguruan serta guru-guru telah berusaha bersungguh-sungguh untuk menghasilkan buku ini.

Saya berharap usaha murni seperti ini diteruskan pada masa hadapan demi kebaikan semua pihak yang terlibat dalam bidang pendidikan Bahasa Tamil.

Dr. Lee Boon Hua
Ketua Penolong Pengarah
Bidang Bahasa dan Kesusasteraan
Bahagian Pembangunan Kurikulum

## முன்னுரை

அனைவருக்கும் வணக்கம். 2003ஆம் ஆண்டு கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவால் உருவாக்கப்பட்ட இலக்கண இலக்கிய விளக்கவுரை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பெரிதும் உதவியிருக்கும் என்று நம்புகிறேன்.

தற்போது பயன்பாட்டில் உள்ள இந்த இலக்கண இலக்கிய விளக்கவுரை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் மேலும் பயன் தரும் வகையில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்வியமைச்சு அதிகாரிகள், ஆசிரியர் பயிற்சிக் கழக விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் உதவியுடன் இந்நூலில் காணப்பட்ட குறைகள் களையப்பட்டு சிறந்த முறையில் செம்மைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நூல் சிறப்பான முறையில் செம்மை பெற்று வெளிவருவதற்கு நல்ல ஆலோசனைகளை வழங்கிய கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவின் இயக்குநர் அவர்களுக்கும் மொழித்துறைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்வதோடு, இப்பணியைச் சிறப்பாக மேற்கொண்ட தமிழ்ப்பிரிவின் உதவி இயக்குநர் திரு.குணசீலன் சுப்பரமணியம் அவர்களுக்கும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும் கல்வியமைச்சு அதிகாரிகளுக்கும் ஆசிரியர் பயிற்சிக் கழக விரிவுரையாளர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



ராமநாதன் நாகரெத்தினம்
தமிழ்ப்பிரிவுத் தலைவர்
கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு
புத்ரா ஜெயா

## JAWATANKUASA PEMURNIAN BUKU PANDUAN TATABAHASA DAN CEYYUL 2008

**Penaung**
Haji Ali Bin Ab. Ghani AMN
Pengarah
Bahagian Pembangunan Kurikulum

**Ketua Penasihat**
Dr. Lee Boon Hua
Ketua Penolong Pengarah
Bahagian Pembangunan Kurikulum

**Penasihat**
Ramanathan Nagarathinam
Ketua Unit Bahasa Tamil
Bahagian Pembangunan Kurikulum

**Pengurus Projek**
Kunaseelan Subramaniam
Penolong Pengarah
Bahagian Pembangunan Kurikulum

**AJK**
Prof. Madya Dr. Sababathy Venugopal
Pensyarah, Jabatan Pengajian India
Universiti Malaya, Kuala Lumpur

Sures Kuppusamy
Penolong Pengarah
Bahagian Pembangunan Kurikulum

Tamilselvan Perumal
Penolong Pengarah
Bahagian Buku Teks

Segaran Muthappen
Penolong Pengarah
Lembaga Peperiksaan Malaysia

Poobalan Manickam
Penolong Pengarah
JPN Pahang

Paramasivam Vadivelu
Ketua Unit Bahasa Tamil
IP Raja Melewar, Seremban

Vengadammal Rajoo
Ketua Unit Bahasa Tamil
IP Tuanku Bainun, Bukit Mertajam

Gunasegaran Kandasamy
Pensyarah Bahasa Tamil
IP Tengku Ampuan Afzan, Kuala Lipis

Manogaran Nampitchai
Penyelia SJK(T)
Jabatan Pelajaran Perak

Verasingam Vembayah
SMK Labu Besar
Kulim, Kedah

Usahrani Arumugam
SMK Air Itam
Georgetown, Pulau Pinang

Ganesh Sabapathy Munusamy
SMK Datuk Hj. Abdul Wahab
Sungai Siput, Perak

Narayanan Krishnan
SMK Syeikh Abdul Ghani
Bidor, Perak

Ponniamah Muniandy
SMK Sri Kota
Taiping, Perak

Nadarajah Gopal
SMK Methodist
Sungai Siput, Perak

Chandran Veeramuthu
SMK Dengkil
Dengkil, Selangor

Vijayakumar Muniandy
SMK Abdul Samad
Telok Datok, Selangor

Subramaniam Rengasamy
SMK Selandar
Selandar, Melaka

Selvarajan Rengasamy
SMK Datuk Bendahara
Jasin, Melaka

Selva Kumaran Subrayan
SMK Mentakab
Mentakab, Pahang

Sockalingam Arumugam Desegar
SMK Karak
Karak, Pahang

Puvaneswari Kalimuthu
SJK(T) Subramaniya Barathi
Gelugor, Pulau Pinang

Achee Subramaniam
SJK(T) Bukit Mertajam
Bukit Mertajam, P.Pinang

Keppali Thodakkalan
SJK(T) Desa Pinji
Lahat, Perak

Nagarajan Subramaniam
SJK(T) Ladang Sg.Samak
Ulu Bernam, Perak

Valarmathi Jakaran
SJK(T) Tanjung Rambutan
Tanjung Rambutan, Perak

Bhaskaran Sankaran
SJK(T) Sungai Renggam
Shah Alam, Selangor

Rajaseran Krishnan
SJK(T) Sungai Manggis
Banting, Selangor

Mookaie @ Anbarasi Uthandan
SJK(T) Persiaran Raja Muda Musa
Pelabuhan Klang, Selangor

Saratha Devi Narayanan
SJK(T) Convent
Seremban, Negeri Sembilan

Vasugi Chakkara Kunki Raman
SJK(T) Ladang Repah
Tampin, Negeri Sembilan

Thanabalan Narayanan
SJK(T) Bradwall
Siliau, Negeri Sembilan

Logabal Tendayoudabam
SJK(T) Jalan Khalidi
Muar, Johor

Kasthuri Manickam
SJK(T) Tampin
Tampin, Negeri Sembilan

# கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு
# இலக்கண இலக்கிய விளக்கவுரை
# KBSM
## இலக்கணம்

## 1.0 எழுத்தியல்

### 1.1 உயிர் எழுத்து *(புகுமுக வகுப்பு/ படிவம் 1)*

- உயிர் எழுத்துகள் 12.
- அவை அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகும்
- இவை பிற எழுத்துகளின் துணையின்றி ஒலிக்கக்கூடியவை.
- உயிர் எழுத்துகள் குறில், நெடில் என இரு வகைப்படும்.

(i) குறில் (குற்றெழுத்து) (5) – குறுகிய ஓசையுடைய எழுத்துகள் (அ, இ, உ, எ, ஒ)

(ii) நெடில் (நெட்டெழுத்து) (7) – நெடிய ஓசையுடைய எழுத்துகள் (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ)

### 1.2 மெய் எழுத்து *(புகுமுக வகுப்பு/ படிவம்* 1)

- மெய் எழுத்துகள் 18.
- அவை க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகும்.
- அவை மூன்று வகைப்படும்.

(i) வல்லினம் (6) - வன்மையான ஒலியுடையவை. (க், ச், ட், த், ப், ற் )

(ii) மெல்லினம் (6) - மென்மையான ஒலியுடையவை. (ங், ஞ், ண், ந், ம், ன்)

(iii) இடையினம் (6) - வல்லினம், மெல்லினம் இரண்டுக்கும் இடைப்பட்ட ஒலியுடையவை. (ய், ர், ல், வ், ழ், ள்)

### 1.3 உயிர்மெய் எழுத்து *(புகுமுக வகுப்பு/ படிவம் 1)*

- உயிர்மெய் எழுத்துகள் 216.
- உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் சேர்வதால் பிறக்கின்ற எழுத்துகளே உயிர்மெய் எழுத்துகளாகும்.

எ.கா : க் + அ = க
(மெய்) (உயிர்) (உயிர்மெய் எழுத்து)

ச் + ஊ = சூ
(மெய்) (உயிர்) (உயிர்மெய் எழுத்து)

- உயிர்மெய் எழுத்துகளின் வகைகள் (நெடுங்கணக்கைக் காண்க)

| | | |
|---|---|---|
| வல்லின உயிர்மெய் எழுத்துகள் | : 72 எழுத்துகள் | 216 எழுத்துகள் |
| மெல்லின உயிர்மெய் எழுத்துகள் | : 72 எழுத்துகள் | |
| இடையின உயிர்மெய் எழுத்துகள் | : 72 எழுத்துகள் | |

- உயிர்மெய் குறில் : 18 X 5 = 90 எழுத்துகள்

  எ.கா: க் + உ = கு

  த் + ஒ = தொ

- உயிர்மெய் நெடில் : 18 X 7 = 126 எழுத்துகள்

  எ.கா: க் + ஊ = கூ

  த் + ஓ = தோ

## 1.4 ஆய்த எழுத்து *(புகுமுக வகுப்பு/ படிவம் 1)*

- மூன்று புள்ளிகளைக் கொண்ட எழுத்து வடிவம் ( ஃ ). இது தனக்கு முன்னே ஒரு குற்றெழுத்தையும் பின்னே ஒரு வல்லின உயிர்மெய் எழுத்தையும் துணையாகக் கொண்டு வரும்.

  எ.கா: எஃகு

  அஃது

## 1.5 இன எழுத்துகள் *(படிவம் 2)*

- இன எழுத்துகள் பிறப்பியல் அடிப்படையில் ஒரே இடத்திலிருந்து பிறக்கும் ஒலிகளாகும்.

### 1.5.1 வல்லினத்திற்கு மெல்லினம் இனமாகும்

க் - ங் - (தங்கம், சங்கு, மங்கை)
ச் - ஞ் - (பஞ்சம், கொஞ்சு, இஞ்சி)
ட் - ண் - (வண்டி, பண்டம், கொண்டு)
த் - ந் - (தந்தம், பந்து, தந்தை)
ப் - ம் - (பம்பரம், குறும்பு, அம்பு)
ற் - ன் - (கன்று, தென்றல், சான்றோர்)

### 1.5.2 உயிர் குறிலுக்கு உயிர் நெடில் இனமாகும்

அ - ஆ
இ - ஈ
உ - ஊ
எ - ஏ
இ - ஐ
ஒ - ஓ
உ - ஔ

*(குறிப்பு : இவை பொதுவாகக் கவிதைகளில் மோனை எனக் கையாளப்படும்)*

எ.கா : **அ**டக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
**ஆ**ரிருள் உய்த்து விடும் *(குறள் 121)*

## 1.6 சுட்டெழுத்து *(படிவம் 2)*

- ஒரு சொல்லில் முதலெழுத்தாக இருந்து ஒரு பொருளைச் சுட்டிக்காட்டுவது சுட்டெழுத்தாகும்.

- சுட்டெழுத்து மூன்று (அ, இ, உ)

(i) அ - சேய்மைச்சுட்டு (தொலைவு) : அங்கு, அவன், அது

(ii) இ - அண்மைச்சுட்டு (அருகில்) : இங்கு, இவன், இது

(iii) உ - இடையே உள்ள பொருளைக் குறிக்கும் : உங்கு, உவன்

*(குறிப்பு : அ, இ ஆகிய இரண்டு சுட்டுகள் மட்டுமே இன்றைய வழக்கில் உள்ளன. 'உ' எனும் சுட்டு இன்றைய வழக்கில் பயன்படுத்தப்படுவதில்லை)*

- சுட்டெழுத்து இரு வகைப்படும்.

### (i) அகச்சுட்டு

- ஒரு சொல்லின் உள்ளே சுட்டெழுத்து அடங்கி வருமாயின் அஃது அகச்சுட்டாகும்.
- இவ்வகைச் சொல்லில் அடங்கியுள்ள சுட்டெழுத்தைப் பிரித்துவிட்டால் அது தனிச் சொல்லாக இயங்காது.

எ.கா : அவன் = அ + வன்
இவள் = இ + வள்
உவர் = உ + வர்

### (ii) புறச்சுட்டு

- ஒரு சொல்லுக்குப் புறத்தே சுட்டெழுத்து நின்று இயங்குவதால் அது புறச்சுட்டு என அழைக்கப்படும்.
- இவ்வகைச் சொல்லில் உள்ள சுட்டெழுத்தைப் பிரித்துவிட்டால் அது தனிச் சொல்லாக இயங்கும்.

எ.கா: அக்குதிரை = அ + குதிரை
இப்புத்தகம் = இ + புத்தகம்
உப்பையன் = உ + பையன்

## 1.7 வினா எழுத்து *(படிவம் 3)*

- வினா எழுத்துகள் 5 அவை *எ, ஏ, யா, ஆ, ஓ* ஆகும்.
- இவை சொல்லின் முதலில் அல்லது இறுதியில் வரும்.

(i) எ, ஏ, யா - சொல்லின் முதல் எழுத்தாக வரும்.
எ.கா : **எ**து? **ஏ**ன்? **யா**து?

(ii) ஆ, ஓ - சொல்லின் இறுதி எழுத்தாக வரும்
எ.கா : அவனா? ( அவன் + **ஆ** )
அதுவோ? ( அது + **ஓ** )

(iii) 'ஏ' காரம் - முதலிலும் இறுதியிலும் வரும்
எ.கா : **ஏ**ன் சென்றாய்?
அவன் செய்தது நல்லதுதானே?
( நல்லது + தான் + **ஏ** )

- வினா எழுத்துகள் அகவினா, புறவினா என இருவகைப்படும். அவை:-

(i) **அகவினா** : - சொல்லின் உள்ளிருந்து வினாப்பொருளைத் தருமாயின் அகவினா எனப்படும்.
- இதனைச் சொல்லில் இருந்து பிரிக்க முடியாது.

எ.கா : யார், ஏன், எப்படி

(ii) **புறவினா** : - சொல்லின் புறத்தே இருந்து வினாப்பொருளைத் தருமாயின் புறவினா எனப்படும்
- இதனைச் சொல்லில் இருந்து பிரிக்கலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எ.கா: | அவனா | = | அவன் | + | ஆ |
| | கள்வனோ | = | கள்வன் | + | ஓ |
| | எப்பொருள் | = | எ | + | பொருள் |

## 1.8 எழுத்து வரன்முறை *(படிவம் 3)*

### 1.8.1 சொல்லின் முதலில் வரும் எழுத்துகள்

- 12 உயிர் எழுத்துகள்
(அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ)

எ.கா : அன்பு, ஆறு, இயல்பு, ஈகை, உண்மை, ஊக்கம்,
எழுச்சி, ஏற்றம், ஐந்து, ஒப்புரவு, ஓதுதல், ஔவை

➢ உயிர்மெய் எழுத்துகள்

(i) ‘க’ முதல் ‘கௌ’ வரை உள்ள எழுத்துகள்

எ.கா : கருத்து, காலம், கிளை, கீரி, குரல், கூடை, கெண்டை, கேடு, கையறு, கொடை, கோயில், கௌவை(பொறாமை)

(ii) ‘ச’ முதல் ‘சௌ’ வரை உள்ள எழுத்துகள்

எ.கா : சங்கு, சாறு, சினம், சீறு, சுனை, சூழ்ச்சி, செம்மல், சேய்மை, சைகை, சொக்கு, சோழன், சௌகரியம்

(iii) ‘த’ முதல் ‘தௌ’ வரை உள்ள எழுத்துகள்

எ.கா : தமிழ், தாமரை, தினவு, தீவு, துணை, தூண், தெளிவு, தேற்றம், தையல், தொல்லை, தோற்றம், தௌவை(மூதேவி)

(iv) ‘ப’ முதல் ‘பௌ’ வரை உள்ள எழுத்துகள்

எ.கா : பண்பு, பாம்பு, பிரிவு, பீடை, புகழ், பூதம், பெரிது, பேதமை, பையன், பொதுமை, போதும், பௌவம்(கடல்)

(v) ‘ட’ -
(vi) ‘ற’ -
} சொல்லின் முதலில் வாரா

- **மெல்லினம்**

(i) ‘ங’ தவிர மற்ற எழுத்துகள் சொல்லின் முதலில் வாரா

எ.கா : ஙனம் (இடத்தையும் தன்மையையும் உணர்த்தும்)

(ii) ‘ஞ’ முதல் ‘ஞௌ’ வரை உள்ள எழுத்துகள்

எ.கா : ஞமலி (நாய்), ஞாயிறு, ஞிமிறு (வண்டு), ஞெகிழி (கொள்ளிக்கட்டை), ஞேயம் (நட்பு), ஞொள்கல் (இளைத்தல்) (ஞீ, ஞு, ஞூ, ஞை, ஞோ, ஞௌ - சொல்லின் முதலில் வாரா)

(iii) ‘ண’ - } சொல்லின் முதலில் வாரா

(iv) ‘ந’ முதல் ‘நௌ’ வரை உள்ள எழுத்துகள்

எ.கா : நகை, நாகம், நிறை, நீலம், நுரை, நூல், நெம்பு, நேற்று, நைதல், நொச்சி, நோன்பு, நௌவி(மான்)

(v) ‘ம’ முதல் ‘மௌ’ வரை உள்ள எழுத்துகள்

எ.கா : மணம், மாதர், மிகுதி, மீட்சி, முதலை, மூத்தவன், மென்மை, மேன்மை, மையல், மொக்கு, மோர், மௌனம்

(vi) ‘ன’ - } சொல்லின் முதலில் வாரா

- **இடையினம்**

(i) ‘ய’ முதல் ‘யௌ’ வரை உள்ள எழுத்துகள்

எ.கா : யவனர், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம் (பேரழகு).
(யி, யீ, யெ, யே, யை, யொ - சொல்லின் முதலில் வாரா)

(ii) ‘ர’ -
(iii) ‘ல’ -
} சொல்லின் முதலில் வாரா

(iv) ‘வ’ முதல் ‘வௌ’ வரை உள்ள எழுத்துகள்

எ.கா : வளமை, வானம், விரல், வீரம், வெளி, வேலி, வையம்,
வௌவால் (வு, வூ, வொ, வோ - சொல்லின் முதலில் வாரா)

(v) ‘ழ’ -
(vi) ‘ள’ -
} சொல்லின் முதலில் வாரா

1.8.2 சொல்லின் இறுதியில் வரும் எழுத்துகள்

(i) 11 உயிர் எழுத்துகள் (அ, ஆ, இ. ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ)

எ.கா :

| | | | |
|---|---|---|---|
| சில | - (ல் + அ) | | |
| பலா | - (ல் + ஆ) | தே | - (த் + ஏ) |
| கிளி | - (ள் + இ) | நகை | - (க் + ஐ) |
| தீ | - (த் + ஈ) | நொ | - (ந் + ஒ) |
| பாட்டு | - (ட் + உ) | போ | - (ப் + ஓ) |
| பூ | - (ப் + ஊ) | வௌ | - (வ் + ஔ) |

“எகரம்’ சொல்லின் ஈற்றில் வாரா.

(ii) 11 மெய் எழுத்துகள் (ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள்)

எ.கா : உரிஞ்(உராய்), கண், வெரிந்(முதுகு), இன்பம், தேன், பாய், பார், பால், தெவ்(பகை), தமிழ், நாள்.

வல்லினம் - க், ச், ட், த், ப், ற் சொல்லின் ஈற்றில் வாரா.

மெல்லினம் - ங் - ஈற்றில் வாரா.

### 1.8.3 சொல்லின் இடையில் வரும் எழுத்துகள்

(i) வல்லினம்

க், ச், ட், த், ப், ற் அனைத்தும் சொல்லின் இடையில் இரட்டித்து வரும்.
எ.கா: பக்கம், தச்சர், கூட்டம், நத்தை, அப்பம், குற்றம்

ட, ற கரம் பிற மெய்களோடும் சொல்லின் இடையிலும் சேர்ந்து வரும்.
எ.கா: ஆட்சி, நிற்க

க, ச, த, ப பிற மெய்களோடு சேர்ந்து வாரா.

(ii) மெல்லினம்

ங், ஞ், ண், ந், ம், ன் அனைத்தும் சொல்லின் இடையில் இரட்டித்து வரும்.
எ.கா: இங்ஙனம், விஞ்ஞானம், அண்ணன், முந்நீர்(கடல்), அம்மா, கன்னம்
(இவை அனைத்தும் சொல்லின் இடையிலும் பிற மெய்களோடும் சேர்ந்து வரும்)
எ.கா: தங்கம், பஞ்சம், உண்கலம், அந்தணர், தம்பட்டம், பொன்மலர்

(iii) இடையினம்

ய், ர், ல், வ், ழ், ள்
ய், ல், வ், ள் இவை அனைத்தும் சொல்லின் இடையில் இரட்டித்து வரும்.

எ.கா: கொய்யா, பல்லி, தெவ்வர்(பகைவர்), பள்ளம்

*(குறிப்பு: ர, ழ கரம் சொல்லுக்கு இடையில் இரட்டித்து வாரா. அனைத்து 6 எழுத்துகளும் சொல்லின் இடையில் பிற மெய்களோடு சேர்ந்து வரும்.*
எ.கா : பொய்க்கால், ஊர்தி, வேல்கொடிது, தெவ்பெரிது, வாழ்தல், கொள்கலன்.

## 1.9 போலி *(படிவம் 4)*

- ஒரு சொல்லில் ஓரிடத்தில் ஓரெழுத்திற்குப் பதிலாக மற்றோர் எழுத்து வந்தாலும் பொருள் மாறாமல் இருப்பின் போலி எனப்படும்.
- போல வருவது போலி.
- போலி மூன்று வகைப்படும்
  - முதற்போலி, இடைப்போலி, கடைப்போலி

### 1.9.1 முதற்போலி

- ஒரு சொல்லின் முதலில் இருக்க வேண்டிய எழுத்திற்குப் பதிலாக வேறோர் எழுத்து அமைந்து அதே பொருளை உணர்த்துமாயின் முதற்போலி எனப்படும்.

- **ந** கரத்திற்கு **ஞ** கரம் போலி
  எ.கா : நயம் - ஞயம்
  நாயிறு - ஞாயிறு

- **ஐ** காரத்திற்கு **அ** கரம் போலி
  எ.கா : பையல் – பயல்
  மையல் - மயல்

### 1.9.2 இடைப்போலி

- ஒரு சொல்லின் இடையில் இருக்க வேண்டிய எழுத்திற்குப் பதிலாக வேறோர் எழுத்து அமைந்து அதே பொருளை உணர்த்துமாயின் இடைப்போலி எனப்படும்.

- **ய** கரத்திற்குச் **ச** கரம் போலி
  எ.கா : நெயவு - நெசவு

- **ச** கரத்திற்கு **ய** கரம் போலி
  எ.கா : கலசம் - கலயம்
  குசவன் - குயவன்
  தேசம் - தேயம்

- **ஐ** காரத்திற்கு **அ** கரம் போலி
  எ.கா : அமைச்சு - அமச்சு
  அரையன் - அரயன்

### 1.9.3 கடைப்போலி

- ஒரு சொல்லின் இறுதியில் இருக்க வேண்டிய எழுத்திற்குப் பதிலாக வேறோர் எழுத்து அமைந்து அதே பொருளை உணர்த்துமாயின் கடைப்போலி எனப்படும்.

- **ம** கரத்திற்கு **ன** கரம் போலி
  எ.கா : அறம் - அறன்
  புறம் - புறன்

- **ல** கரத்திற்கு **ள** கரம் போலி
  எ.கா : மதில் - மதிள்
  செதில் - செதிள்

- ல கரத்திற்கு ர கரம் போலி

எ.கா : குடல் - குடர் , பந்தல் - பந்தர்

சாம்பல் - சாம்பர்

## 1.10 குற்றியலுகரம் *(படிவம் 4 & 5)*

1.10.1 வல்லின உகரங்கள் (கு, சு, டு, து, பு, று) சொல்லின் இறுதியில் வரும்பொழுது குறுகி ஒலிக்கும். தனிக்குறிலை அடுத்து வாரா.

எ.கா : பாக்**கு** பாட்**டு** காப்**பு**

வாத்**து** பற்**று** **பாய்ச்**சு

1.10.2 குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

| எண் | வகை | விளக்கம் | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|
| அ | நெடில்தொடர்க் குற்றியலுகரம் | தனி நெடில் எழுத்தை அடுத்து வருகின்ற வல்லின உகரம் நெடில்தொடர்க் குற்றியலுகரம் ஆகும். | பாகு சூது<br>மாசு பாபு<br>நாடு சாறு |
| ஆ | வன்தொடர்க் குற்றியலுகரம் | ஒரு சொல்லின் இறுதியில் வரும் வல்லின உகரத்திற்கு முன் வல்லின மெய் (க், ச், ட், த், ப், ற்) இருந்தால் வன்தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.<br>-வன்தொடரின் பின்னால் வல்லெழுத்து மிகும் | வாக்கு<br>அச்சு<br>பாட்டு<br>கூத்து<br>தப்பு<br>கூற்று |
| இ | மென்தொடர்க் குற்றியலுகரம் | ஒரு சொல்லின் இறுதியில் வரும் வல்லின உகரத்திற்கு முன் மெல்லின மெய் (ங், ஞ், ண், ந், ம், ன்) இருந்தால் மென்தொடர்க் குற்றியலுகரம் ஆகும். | பங்கு<br>அஞ்சு<br>வண்டு<br>பந்து<br>அம்பு<br>கன்று |
| ஈ | இடைத்தொடர்க் குற்றியலுகரம் | ஒரு சொல்லின் இறுதியில் வரும் வல்லின உகரத்திற்கு முன் இடையின மெய் (ய், ர், ல், வ், ழ், ள்) இருந்தால் இடைத் தொடர்க் குற்றியலுகரம் ஆகும். | கொய்து<br>மார்பு<br>சால்பு<br>போழ்து<br>தெள்கு |
| உ | உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் | ஒரு சொல்லின் இறுதியில் வரும் வல்லின உகரத்திற்கு முன் உயிர் எழுத்து வரின் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.<br>எ.கா : அ **ழு** கு<br>↓<br>ழ் + அ (உயிரெழுத்து) | முதுகு<br>கரடு<br>பரிசு<br>விருது<br>உருபு<br>கயிறு |
| ஊ | ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் | ஒரு சொல்லின் இறுதியில் வரும் வல்லின உகரத்திற்கு முன் ஆய்த எழுத்து (ஃ) வரின் ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் ஆகும். | எஃகு<br>அஃது<br>கஃசு |

### 1.11 முற்றியலுகரம் *(படிவம் 5)*

- எல்லா உகரங்களும் (கு,சு, டு, து, பு, று, யு, ரு, லு, வு, ழு, ளு, ஙு, ஞு, ணு, நு, மு, னு) தனித்து முழுமையாக ஒலிக்கும் போது முற்றியல் உகரங்களாகும்.

- தனிக்குறிலை அடுத்து வருகின்ற வல்லின உகரம் முற்றியல் உகரமாகும்.

  எ.கா : நடு, விடு, உறு, பொது, பசு, படு

- சொல்லின் இறுதியில் வருகின்ற மெல்லின, இடையின உகரங்கள் முற்றியல் உகரங்களாகும்.

  எ.கா : அணு, விம்மு, உரு, பளு, விழு, கதவு, தாழ்வு

- சொல்லின் முதல் எழுத்தாக வரும் உகரம் முற்றியலுகரம்

  எ.கா : உலகம், குடல், புண், முன், துவர்ப்பு

## 2.0 சொல்லியல்

- எழுத்து தனித்தோ தொடர்ந்தோ நின்று பொருள் தருமாயின் சொல் எனப்படும்.

  எ.கா : (i) தீ, பூ, ஆ (ii) நடந்தான், கடல்

- தமிழ்ச் சொற்கள் இலக்கிய அடிப்படையிலும் இலக்கண அடிப்படையிலும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2.1 தமிழ்ச் சொற்கள் இலக்கிய அடிப்படையில் 4 வகைப்படும். அவை :-
 அ) இயற்சொல்
 ஆ) திரிசொல்
 இ) திசைச்சொல்
 ஈ) வடசொல்

### அ) இயற்சொல் *(படிவம் 5)*

- தொன்று தொட்டு தமிழ் மக்களிடையே இயல்பாக வழங்கி வருகின்ற சொற்கள் இயற்சொற்களாகும்.

  எ.கா : பொன், கல், மரம், ஓடினான், பயின்றான்

### ஆ) திரிசொல் *(படிவம் 5)*

- பண்டைய காலத்தில் கற்றோர் மத்தியில் வழங்கப்பட்டு, ஆனால் பாமர மக்களுக்குப் புரியாத சில சொற்கள் திரிசொற்களாகும். தற்காலத் தமிழில் திரிசொல் என்ற வகை இல்லை.

  எ.கா : கிள்ளை(கிளி), படர்ந்தான் (நீங்கினான்), நௌவி (மான்), மஞ்ஞை (மயில்)

### இ) திசைச் சொற்கள் *(படிவம் 5)*

- வரலாறு, வணிகம், அறிவியல் வளர்ச்சி, தொழில் நுட்பம், தொடர்புத் துறை முதலிய காரணத்திற்காக மற்ற மொழிகளிலிருந்து பெறப்பட்டுத் தமிழில் வழங்குகின்ற சொற்கள் திசைச் சொற்கள் எனப்படும்.

எ.கா :

| **ஆங்கிலம்** | **கன்னடம்** | **அரபு** |
|---|---|---|
| பென்சில் | அக்கடா | அபின் |
| டயர் | அக்கறை | பாக்கி |
| பேனா | கோசரம் | ஆபத்து |

| **இந்துஸ்தானி** | **போர்த்துகீசியம்** |
|---|---|
| குல்லா | அலமாரி |
| குஷி | சாவி |
| இலாகா | ஜன்னல் |

| **பாரசீகம்** | **தெலுங்கு** |
|---|---|
| அலாதி | அப்பட்டம் |
| கம்மி | ஆஸ்தி |
| கிஸ்தி | கெட்டியாக |

### ஈ) வடசொல் *(படிவம் 5)*

- வடசொல், வடமொழிக்கும் தமிழுக்கு உரிய பொதுவான ஒலிகளால் தமிழில் வழங்குவதாகும்.

- வடசொல் இரண்டு வகைப்படும்.

(i) **தற்சமம்** - வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் பொதுவான எழுத்தொலிகளால் அமைந்த வடசொல் தமிழில் வந்து வழங்குவது தற்சம வடசொல்லாகும்.

எ.கா : கமலம், அனுபவம், நியாயம்

(ii) **தற்பவம்** - வடமொழிக்குரிய சிறப்பெழுத்துகளாலும் இரு மொழிகளுக்கு உரிய பொது எழுத்துகளாலும் அமைந்த வடசொல் தற்பவ வடசொல். வடசொற்களைத் தமிழில் எழுதும் பொழுது தமிழினிமைக்கு ஏற்றவாறு சில வடமொழி எழுத்துகளுக்கு ஈடாகத் தமிழெழுத்தை எழுதுவது வழக்கம்.

எ.கா :

| | | |
|---|---|---|
| வருஷம் | - | வருடம் |
| மீனாக்ஷி | - | மீனாட்சி |
| ஜலம் | - | சலம் |
| ஹனுமன் | - | அனுமன் |
| விவாஹம் | - | விவாகம் |

2.2 தமிழ்ச் சொற்கள் இலக்கண அடிப்படையில் 4 வகைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவை :-

அ) பெயர்ச்சொல்
ஆ) வினைச்சொல்
இ) இடைச்சொல்
ஈ) உரிச்சொல்

**அ) பெயர்ச்சொல்** *(படிவம் 1)*

- ஒரு பொருளின் பெயரைக் குறிப்பது பெயர்ச்சொல்லாகும்.
- பெயர்ச்சொற்கள் மட்டும்தான் வேற்றுமை உருபை ஏற்கும்.
- பெயர்ச்சொற்கள் ஆறு வகைப்படும்.

(i) **பொருட்பெயர்** - ஒரு பொருளின் பெயரைக் குறிப்பது.
எ.கா: மாமா, பூபாலன், பூனை, ஆசிரியர், பட்டம்

(ii) **இடப்பெயர்** - ஓர் இடத்தின் பெயரைக் குறிப்பது.
எ.கா: திடல், பள்ளி, மலேசியா, சுங்கை சிப்புட்

(iii) **காலப்பெயர்** - காலத்தைக் குறிப்பது.
எ.கா: காலை, நள்ளிரவு, நேற்று, பங்குனி, வியாழன், கோடை

(iv) **சினைப்பெயர்** - ஒரு பொருளின் பகுதிகளை அல்லது உறுப்புகளைக் குறிப்பது.
எ.கா: கிளை, பழம், இலை, தலை, வால்

(v) **பண்புப்பெயர்** *(குணப்பெயர்)* - குணத்தை அல்லது பண்பைக் குறிக்கும்
எ.கா: அன்பு, கருமை, உயரம், பசுமை

(vi) **தொழிற்பெயர்** - தொழிலைக் குறிப்பது.
எ.கா: பாடுதல், கற்பித்தல், படிப்பு, ஏற்றுமதி

## 2.2.1 இடுகுறிப்பெயர்

ஒரு பொருளுக்கு ஏதொரு காரணமுமின்றிப் பெயரிடப்பட்டுத் தொன்று தொட்டு வழங்கி வரும் பெயர்ச்சொல்.
எ.கா: மண், கல், நீர், புல்

## 2.2.2 காரணப்பெயர் *(படிவம் 3)*

ஒரு பொருளுக்குக் காரணத்தோடு இடப்பட்ட பெயர்ச்சொல்
எ.கா: பறவை, நாற்காலி, வானூர்தி, காற்றாடி

## 2.2.3 ஆகுபெயர் *(படிவம் 3)*

- ஒரு பொருளின் பெயர் அதனைக் குறிக்காமல், அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்கு ஆகிவருவது ஆகுபெயர் எனப்படும்.

- ஆகுபெயர் ஆறு வகைப்படும்.

**(i) பொருளாகு பெயர்** - ஒரு முழுப்பொருளின் பெயர் அதற்கே உரிய பொருளைக் குறிக்காது, அதன் சினையை மட்டும் குறித்து வருவது பொருளாகு பெயராகும்.
எ.கா: **வாழை**க்கறி,
**பூசணிச்** சாம்பார்.

**(ii) இடவாகு பெயர்** - ஓரிடத்தின் பெயர் அதனோடு தொடர்புடைய இன்னொரு பொருளுக்குப் பெயராகி வருவது இடவாகு பெயராகும்.
எ.கா: **மலேசியா** வென்றது.
**நாடு** போற்றியது .
**உலகம்** அழுதது.

**(iii) காலவாகு பெயர்** - ஒரு காலத்தின் பெயர், அக்காலத்தில் செய்யப்படுகின்ற செயல் அல்லது தன்மையைக் குறிப்பது காலவாகு பெயராகும்.
எ.கா: **கார்** அறுத்தான்.
**கார்த்திகை** மலர்ந்தது.

**(iv) சினையாகு பெயர்** - ஒரு சினையின் பெயர் (ஒரு பொருளின் பகுதி அல்லது உறுப்பு) அதனோடு தொடர்புடைய ஒரு முழுப் பொருளுக்கு ஆகிவருவது சினையாகு பெயராகும்.
எ.கா : **தலைக்குப்** பத்து வெள்ளி கொடு.
**வாய்** துடித்தது

**(v) பண்பாகு பெயர்** - ஒரு பண்பின் பெயர் அப்பண்பினை உடைய பொருளுக்கு ஆகிவருவது பண்பாகு பெயராகும்.
எ.கா: **இனிப்பு** உண்டான்.
**அழுக்கைத்** துவைத்தான்.
**நீலம்** சூடினாள்.

**(vi) தொழிலாகு பெயர்** - ஒரு தொழிலின் பெயர் அத்தொழிலோடு தொடர்புடைய பிரிதொரு பொருளுக்கு ஆகிவருவது தொழிலாகு பெயராகும்.
எ.கா: **வறுவல்** உண்டான்.
**பொங்கல்** வைத்தார்.

### 2.2.4 திணை *(படிவம் 4)*

- திணை என்பது வகுப்பு.
- அஃது உயர்திணை, அஃறிணை என இருவகைப்படும்.

**அ) உயர்திணை** - உயிருள்ளனவற்றுள் மனிதர், தேவர் போன்ற பகுத்தறிவு உள்ளவர்களைக் குறிப்பது.

எ.கா: அப்பா, கலையரசி, மருத்துவர்

**ஆ) அஃறிணை** - பகுத்தறிவற்ற உயிரினங்களையும் உயிரற்ற பொருள்களையும் குறிப்பது

எ.கா: கரடி, செடி, புத்தகம், காலணி

### 2.2.5 பால் *(படிவம் 4)*

- பகுப்பு அல்லது பிரிவு பால் எனப்படும்.
- பொருள்களை (உயர்திணை, அஃறிணை) ஐவகைப் பால்களாகப் பிரிக்கலாம். அவை:-

**அ) ஆண்பால்** - முருகன், சிறுவன், அரசன்

**ஆ) பெண்பால்** - மாணவி, பொற்செல்வி, அரசி

**இ) பலர்பால்** - மாணவர்கள், இளையோர்

**ஈ) ஒன்றன்பால்** - மரம், புலி, மயில்

**உ) பலவின்பால்** - மரங்கள், புலிகள், மயில்கள்



2.2.6 **எண்** *(படிவம் 4)*

- பொருள்களின் எண்ணிக்கையை உணர்த்துவது எண் ஆகும்.
- எண் இருவகைப்படும். அவை ஒருமை, பன்மை எனப்படும்.
- ஒரு பொருளை மட்டும் குறிப்பது ஒருமை, ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறிப்பது பன்மை.

எ.கா:

| **ஒருமை** | **பன்மை** |
|---|---|
| நாற்காலி | நாற்காலிகள் |
| பெண் | பெண்கள் |
| புத்தகம் | புத்தகங்கள் |
| மகன் | மகன்கள் |

2.2.7 **இடம்** *(படிவம் 2 / படிவம் 4)*

- பேசுவோர் இடத்தைக் குறிப்பது இடம்.
- இடம் மூவகைப்படும். அவை :-

**அ) தன்மை** - பேசுபவர் தம்மைத் தாமே குறிக்கும் பெயர் தன்மை எனப்படும்.

எ.கா: நான், என், நாங்கள், நாம், எங்கள், யான், யாம்

**ஆ) முன்னிலை** - பேசுபவர் முன்னால் நின்று கேட்பவரைக் குறிக்கும் பெயர்கள் முன்னிலை எனப்படும்.

எ.கா: நீ, நீங்கள், உன், உமது, நீர், நீவீர், உங்கள்

**இ) படர்க்கை** - பேசுபவர், கேட்பவரைத் தவிர்த்து மற்றப் பெயர்கள் படர்க்கை எனப்படும்.

எ.கா: அவன், அவள், அது, அவர்கள், அவை, கண்ணன்

2.2.8 **வேற்றுமை** *(படிவம் புகுமுக வகுப்பு / 1 / 2 / 4)*

- பெயர்சொல்லின் பொருளையும் அதன் தன்மையையும் வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமையாகும்.
- வேற்றுமை எட்டு வகைப்படும். அவை :-

| **வகை** | **உருபு** | **எடுத்துக்காட்டு** |
|---|---|---|
| முதல் வேற்றுமை (எழுவாய் வேற்றுமை) | உருபு இல்லை | - **<u>தமிழரசு</u>** தேர்வு எழுதினான். |
| இரண்டாம் வேற்றுமை | ஐ | - அம்மா **<u>தமிழரசை</u>**ப் பாராட்டினார். |

| | | |
|---|---|---|
| மூன்றாம் வேற்றுமை | ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன் | - **<u>தமிழரசால்</u>** கோயில் கட்டப்பட்டது.<br>- தம்பி **<u>தமிழரசோடு</u>** கடைக்குச் சென்றான். |
| நான்காம் வேற்றுமை | கு | - **<u>தமிழரசுக்குப்</u>** பதவி உயர்வு கிடைத்தது. |
| ஐந்தாம் வேற்றுமை | இன், இருந்து, இல், நின்று | - நான் **<u>தமிழரசிடமிருந்து</u>** காசோலையைப் பெற்றேன்.<br>- **<u>தமிழரசின்</u>** தமிழாற்றல் என்னைக் கவர்ந்தது. |
| ஆறாம் வேற்றுமை | அது, உடைய | - **<u>தமிழரசினது</u>** புத்தகம் கிடைத்து விட்டது<br>- **<u>தமிழரசினுடைய</u>** வீடு அழகாக இருக்கும் |
| ஏழாம் வேற்றுமை | இல், இடம், பால், கண் | - **<u>தமிழரசிடம்</u>** நற்பண்புகள் இருக்கின்றன.<br>- **<u>தமிழரசு</u>**பால் அன்பு கொள்க. |
| எட்டாம் வேற்றுமை (விளி வேற்றுமை) | உருபு இல்லை (விளித்தல்/ அழைத்தல்) | - **<u>தமிழரசா</u>**! இங்கே வா. |

**ஆ. வினைச்சொல்** *(படிவம் 2/5)*

- ஒரு பொருளின் (எழுவாய்) தொழிலை அல்லது செயலைக் காட்டும் சொல் வினைச்சொல் எனப்படும்.
- வினைச்சொல் காலம் காட்டும்.
- காலம் மூன்று வகைப்படும். அவை:-

அ. இறந்த காலம்
ஆ. நிகழ்காலம்
இ. எதிர்காலம்

**அ. இறந்த காலம்**

ஒரு செயல் அல்லது தொழில் நடந்து முடிந்து விட்டதைக் காட்டுவது இறந்த காலம்.
எ.கா: பாடினான், நடந்தன, கேட்டாள், ஆடினர், சென்றது

**ஆ. நிகழ்காலம்**

ஒரு செயல் அல்லது தொழில் நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் காட்டுவது நிகழ்காலம்.
எ.கா: பாடுகிறான், நடக்கின்றன, கேட்கிறாள், ஆடுகின்றனர், செல்கிறது

### இ. எதிர்காலம்

ஒரு செயல் அல்லது தொழில் நடைபெறவிருப்பதைக் காட்டுவது எதிர்காலம்.
எ.கா: பாடுவான், நடக்கும், கேட்பாள், ஆடுவர், செல்லும்.

## 2.1 வினைமுற்று *(படிவம் 2/5)*

- ஒரு வினையின் கருத்து முற்றுப்பெற்றிருக்கும்போது வினைமுற்று எனப்படும்.
- வினைமுற்று காலம், திணை, எண், இடம், பால் போன்றவற்றைத் தெளிவாகக் காட்டும்.

எ.கா: பூரணி பட்டம் **பெற்றாள்.**
மாடு புல் **மேய்கிறது.**
மாணவர்கள் பாடம் **படிப்பார்கள்.**

*(குறிப்பு : வினைமுற்று காலம், திணை, எண், இடம், பால் ஆகியவற்றைக் காட்டுவதைப் பின்வரும் அட்டவணையின் வழி அறிந்துகொள்க).*

| வினைமுற்று | காலம் | திணை | எண் | இடம் | பால் |
|---|---|---|---|---|---|
| 1. பெற்றாள் | இறந்த காலம் | உயர்திணை | ஒருமை | படர்க்கை | பெண்பால் |
| 2. மேய்கிறது | நிகழ்காலம் | அஃறிணை | ஒருமை | படர்க்கை | ஒன்றன்பால் |
| 3. படிப்பார்கள் | எதிர்காலம் | உயர்திணை | பன்மை | படர்க்கை | பலர்பால் |

## 2.2 எச்சம் *(படிவம் 2/5)*

- முற்றுப்பெறாத கருத்து அல்லது வினை, எச்சம் எனப்படும்.
- கருத்து அல்லது வினை முற்றுப்பெறுவதற்கு இன்னொரு சொல்லை எதிர்நோக்கி இருக்கும்.
- எச்சம் பெயர்ச்சொல்லையோ வினைச்சொல்லையோ ஏற்கும்.
  எ.கா:

பாடிய
பாடுகின்ற } எச்சங்கள்
பாடும்

பாடினான் (வினைமுற்று)

- எச்சம் பெயரெச்சம், வினையெச்சம் என இருவகைப்படும்.

**அ) பெயரெச்சம் -** முற்றுப்பெறாத வினைச்சொல் (எச்சம்) பெயர்ச்சொல்லைச் சார்ந்து நின்றால் பெயரெச்சம் எனப்படும்.

எ.கா: **<u>படித்த</u>** புத்தகம்
(எச்சம்) (பெயர்ச்சொல்)

**<u>ஓடிய</u>** பையன்
(எச்சம்) (பெயர்ச்சொல்)

i) **எதிர்மறைப் பெயரெச்சம்**

எ.கா: **<u>பாடாத</u>** குயில்
(எதிர்மறை எச்சம்) (பெயர்ச்சொல்)

ii) **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

எ.கா: பாடா**த** குயில் = **<u>பாடாக்</u>** குயில்

↓

நிலைமொழி ஈறு **<u>த</u>** கெட்டுவிட்டது

அழியாத புகழ் = **<u>அழியாப்</u>** புகழ்
தேடாத செல்வம் = **<u>தேடாச்</u>** செல்வம்

**ஆ) வினையெச்சம்** - முற்றுப்பெறாத வினைச்சொல் (எச்சம்) வினைமுற்றைச் சார்ந்து நின்றால் வினையெச்சம் எனப்படும்.

எ.கா: **<u>படித்து</u>** முடித்தான்
(எச்சம்) (வினைமுற்று)

**<u>ஆடிப்</u>** பாடினாள்
(எச்சம்) (வினைமுற்று)

## 2.3 தன்வினை / பிறவினை *(படிவம் 3/5)*

**அ) தன்வினை** - எழுவாய் (ஒருவர்) தானே செய்யும் செயலைக் குறிப்பது தன்வினையாகும்.

**ஆ) பிறவினை** - எழுவாய் (ஒருவர்) பிறரைக் கொண்டு செய்விக்கும் செயல் பிறவினையாகும்.

எ.கா:

| தன்வினை | பிறவினை |
|---|---|
| தம்பி <u>**படித்தான்**</u> . | தம்பி <u>**படிப்பித்தான்**</u>. |
| தாத்தா <u>**உண்டார்**</u>. | தாத்தா <u>**உண்பித்தார்**</u>. |
| ஆசிரியர் கட்டுரை <u>**எழுதினார்**</u>. | ஆசிரியர் கட்டுரை <u>**எழுதுவித்தார்**</u>. |

## 2.4 செய்வினை / செயப்பாட்டுவினை

*(படிவம் 3/5)*

### அ) செய்வினை

- ஒரு வினையை எழுவாய் (ஒருவன்) முன்னின்று செய்வது செய்வினையாகும்.
- செய்வினை வாக்கியத்தில் எழுவாய்க்கு முதன்மை கொடுக்கப்படும்.

எ.கா: **கயல்விழி** நடனம் <u>ஆடினாள்</u>.

### ஆ) செயப்பாட்டு வினை

- ஒரு வாக்கியத்தில் செயப்படுபொருளுக்கு முதன்மை கொடுப்பது செயப்பாட்டுவினை வாக்கியமாகும்.

எ.கா: நடனம் **கயல்விழியால்** <u>ஆடப்பட்டது</u>.

| செய்வினை | செயப்பாட்டுவினை |
|---|---|
| ஆசிரியர் பாடம் கற்பித்தார். | பாடம் ஆசிரியரால் கற்பிக்கப்பட்டது. |
| பொதுமக்கள் கூட்டுப்பணி செய்கின்றனர். | கூட்டுப்பணி பொதுமக்களால் செய்யப்படுகின்றது. |

*(குறிப்பு : (i) இரு வாக்கியங்களும் ஒரே கருத்தை உணர்த்தும்.*
*(ii) செயப்பாட்டுவினை வாக்கியத்தில் எழுவாய் மூன்றாம் வேற்றுமை உருபை (ஆல்) ஏற்று வரும்.*

## 2.5 குன்றியவினை / குன்றாவினை *(படிவம் 3)*

### அ) குன்றியவினை

- வாக்கியத்தில் செயப்படுபொருளை ஏற்காத வினைமுற்றைக் குன்றியவினை என்பர்.
- குன்றியவினையை ஏற்று வரும் வாக்கியங்களில் 'எதை', 'எவற்றை', 'யாரை' என்ற கேள்விகளுக்கு விடை வராது.

எ.கா:

| **எழுவாய்** | **பயனிலை (குன்றியவினை)** |
|---|---|
| குதிரை | கனைத்தது |
| பாவாணர் | மகிழ்ந்தார் |

### ஆ) குன்றாவினை

- வாக்கியத்தில் செயப்படுபொருளை ஏற்று வரும் வினைமுற்றைக் குன்றாவினை என்பர்.
- 'எதை', 'எவற்றை', 'யாரை' என்ற கேள்விகளுக்கு விடை கொடுக்கும் வினைமுற்று குன்றாவினையாகும்.

எ.கா:

| **எழுவாய்** | **செயப்படுபொருள்** | **பயனிலை (குன்றாவினை)** |
|---|---|---|
| அறவாணர் | நூலகத்தைப் | பாதுகாத்தார் |
| யாழினி | யாழை | மீட்டினாள் |

*(குறிப்பு : செயப்படுபொருள் தெளிவாக வெளிப்படுகிறது)*

- சில வாக்கியங்களில் செயப்படுபொருள் மறைந்து, இல்லாதது போன்ற மயக்க நிலையைக் கொடுக்கும்.

எ.கா:

| **எழுவாய்** | **பயனிலை (குன்றாவினை)** | |
|---|---|---|
| அறவாணர் | அழைத்தார். | யாரை? - தம்பியை |
| பெருஞ்சித்திரனார் | எழுதினார். | எதை? - நூலை |

*(குறிப்பு : செயப்படுபொருள் மறைந்துள்ளது)*

## 2.6 உடன்பாட்டுவினை / எதிர்மறைவினை *(படிவம் 4/5)*

**அ) உடன்பாட்டுவினை** - ஒரு செயல் நடைபெறுவதைப் பற்றியும் நடைபெற்றதைப் பற்றியும் நடைபெறவிருப்பதைப் பற்றியும் கூறும் வினைச்சொல் உடன்பாட்டுவினை எனப்படும்.

**ஆ) எதிர்மறைவினை** - ஒரு செயல் நடைபெறாததைப் பற்றிக் கூறும் வினைச்சொல் எதிர்மறைவினை எனப்படும்.

எ.கா: 1. அருள்மதி பள்ளிக்கு வந்தாள். (உடன்பாட்டுவினை)
2. அருள்மதி பள்ளிக்கு வரவில்லை (எதிர்மறைவினை)

1. மாடுகள் கொட்டகைக்கு வந்தன. (உடன்பாட்டுவினை)
2. மாடுகள் கொட்டகைக்கு வந்தில. (எதிர்மறைவினை)

| **உடன்பாட்டுவினை** | **எதிர்மறைவினை** |
|---|---|
| 1. படிப்பேன் | படியேன் / படிக்க மாட்டேன் |
| 2. வருகிறேன் | வந்திலேன் / வரமாட்டேன் |
| 3. செய்தான் | செய்திலன் / செய்யவில்லை |
| 4. நடுவாள் | நடாள் / நடமாட்டாள் |
| 5. கண்டாய் | கண்டிலாய் / காணவில்லை |
| 6. தின்றது | தின்றிலது / தின்னவில்லை |
| 7. நடந்தன | நடந்தில / நடக்கவில்லை |
| 8. ஓடினர் | ஓடிலர் / ஓடவில்லை |
| 9. தந்தார் | தந்திலர் / தரவில்லை |
| 10. உறங்குவாள் | உறங்காள் / உறங்கமாட்டாள் |

## 2.7 அடை

- சொல்லின் தன்மையை அல்லது இயல்பை விளக்குவது அடையாகும்.
- அடை இருவகைப்படும். அவை பெயரடை, வினையடை.

**அ) பெயரடை** - பெயர்ச்சொல்லின் தன்மையை விளக்குவது பெயரடையாகும்.
- பெயரடை பெரும்பாலும் 'ஆன' என்ற சொல் உருபு பெற்று வரும்.

எ.கா: **<u>அழகான</u>** (பெயரடை) குழந்தை (பெயர்ச்சொல்)

**<u>உயரமான</u>** (பெயரடை) மலை (பெயர்ச்சொல்)

**ஆ) வினையடை** - வினைச்சொல்லின் தன்மையை விளக்குவது வினையடையாகும்.
- வினையடை 'ஆக' என்ற சொல் உருபு பெற்று வரும்.

எ.கா: **<u>வேகமாக</u>** ஓடினாள்
(வினையடை) (வினைச்சொல்)

**<u>கடுமையாகப்</u>** பேசினார்
(வினையடை) (வினைச்சொல்)

## 2.8 பகுபதம் / பகாப்பதம் *(படிவம் 5)*

- தமிழ்ச்சொற்களைப் பகுபதம், பகாப்பதம் என இரு வகையாகப் பிரிக்கலாம்.

**அ) பகுபதம்** - பகுக்கக்(பிரிக்க) கூடிய சொல் பகுபதம் ஆகும்.

- பகுபதங்களைப் பகுதி, விகாரம், சந்தி, இடைநிலை, சாரியை, விகுதி என ஆறு கூறுகளாகப் பிரிக்கலாம்.

- ஒரு சொல்லின் வேர்ச்சொல், சொல்லின் பகுதி ஆகும். பகுதிக்கு அகராதிப் பொருள் உண்டு. (சொல்லின் இறுதியில் இருப்பது விகுதி.)

- விகுதி - திணை, பால், எண், காலம், இடம் ஆகியவற்றைக் காட்டும்.

எ.கா:

| **சொல்** | **பகுதி** | **விகுதி** |
|---|---|---|
| அறிவான் | அறி | ஆன் |
| பார்வை | பார் | வை |
| கல்வி | கல் | வி |
| தலைவன் | தலை | அன் |

**ஆ) பகாப்பதம்** - பகுக்க (பிரிக்க) முடியாத சொல் பகாப்பதம் ஆகும்.

- பகாப்பதங்கள் பொதுவாக வேர்ச் சொற்களாக இருக்கும்.

எ.கா: பூ, கலை, நட, ஆடு, படி, வா

## இ. இடைச்சொல் *(படிவம் 3/5)*

- பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் இடையில் அல்லது முன்னும் பின்னும் இருந்து பொருளை விளக்கும் சொல் இடைச்சொல் எனப்படும்.
- இவை தனித்து நிற்க இயலா.
- இவற்றை எட்டு வகையாகப் பிரிக்கலாம்.
  அவையாவன :-

1) வேற்றுமை உருபுகள் : ஐ, ஆல், கு, இன், அது, கண் முதலியன ஆகும்.
   எ.கா : கத்தியால், வீட்டிற்கு, அவனது, அவன்கண்

2) பால் காட்டும் விகுதிகள் : அன், ஆன், அள், ஆள், ஆர், அது முதலியன ஆகும்.

   எ.கா : அரசன் , ஓடியது, வந்தார், ஆவார்

3) காலம் காட்டும் இடைநிலைகள்
   i. இறந்த கால இடைநிலைகள் : த், ட், ற்
   ii. நிகழ்கால இடைநிலைகள் : கிறு, கின்று, ஆநின்று
   iii. எதிர்கால இடைநிலைகள் : ப், வ், க்

   எ.கா : செத்தான், நடக்கிறான், பறக்கும்

4) சாரியைகள் : அத்து, அற்று, அன், அம், இன் முதலியன ஆகும்.

   எ.கா : மற்றவற்றை, மரத்திற்கு (மரம் + அத்து + இன் + கு)

5) உவம உருபுகள் : போல, புரைய, அன்ன, ஒப்ப முதலியன ஆகும்.
   எ.கா : புலிபோலப் பாய்ந்தான்.

6) சுட்டெழுத்துகள் : அ, இ, உ
   எ.கா : அப்பையன், இப்பையன், உப்பையன்

7) வினா எழுத்துகள் : எ, யா, ஆ, ஓ, ஏ
   எ.கா : அவனா? யானோ? அவன் தானே? யார்?

8) செய்யுள் அசைகள் : என, ஏ, அம்ம முதலியன ஆகும்.
   எ.கா: அம்ம வாழி தோழி

*(குறிப்பு: இவற்றைத் தவிர்த்துத் தொடர்களை இணைக்கப்பயன்படும் ஆகவே, ஆனால், எனவே, ஏனென்றால், ஆகையால் போன்றவையும் தற்காலத்தில் இடைச் சொற்களாகக் கருதப்படுகின்றன.)*

**ஈ. உரிச்சொல்** *(படிவம் 5)*

- உரிச்சொல் என்பது பொருள்களின் குணம், தொழில் ஆகிய பண்புகளை உணர்த்தும்.

- உரிச்சொல் ஒரு பொருள் குறித்த பல சொற்களாகவும் பல பொருள் குறித்த ஒரு சொல்லாகவும் இருக்கும்.

- உரிச்சொற்கள் என்பவை பெயர்ச்சொல், வினைச்சொல் முன் அமைந்து அச்சொற்களுக்கு அணி (சிறப்பு) சேர்க்கும்.

i. ஒரு பொருள் குறித்த பல சொற்கள்

சால, உறு, தவ, நனி, கூர், கழி

எ.கா: - சாலச் சிறந்தது
- உறு பொருள்
- தவப் பெரிது
- நனி நன்று
- கூர் மதி
- கழி பேருவகை

ii. பல பொருள் குறிக்கும் ஒரு சொல்

எ.கா: - கடி நகர் (காப்பு)
- கடி நுனை (கூர்மை)
- கடி மாலை (மணம்)
- கடி மார்பன் (அழகு)
- கடி மணம் (திருமணம்)

## 3.0 வாக்கியம்

- முழுக்கருத்தைத் தெரிவிக்கும் சொற்கூட்டம், வாக்கியம் அல்லது முற்றுச் சொற்றொடர் என அழைக்கப்படும்.
- தமிழ் வாக்கியங்களில் மூன்று உறுப்புகள் உள்ளன. அவை:- எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பன ஆகும்.

### *3.1* எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் *(படிவம் 1)*

**அ) எழுவாய்**
- ஒரு செயல் நிகழ்வதற்குக் காரணமாய் இருப்பது எழுவாய்.
- பயனிலையில் நின்று யார், எது, எவை, யாவை முதலிய வினாக்களை எழுப்பும்போது கிடைக்கும் விடையே வாக்கியத்தின் எழுவாய் ஆகும்.
- பெயர்ச்சொற்கள், தொகைகள் முதலியவை வாக்கியத்தில் எழுவாயாக அமையும்.
- எழுவாய் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் உணர்த்தப்படும்.

**ஆ) பயனிலை** - எழுவாயின் செயலைக் காட்டும் சொல் பயனிலை ஆகும்.
- வினைமுற்றுகள், பெயர்ச்சொற்கள், வினாப்பெயர் ஆகியவை பயனிலையாக வரும்.
- எல்லா வாக்கியங்களிலும் பயனிலை இருக்கும்.

**இ) செயப்படுபொருள்** - பயனிலையில் நின்று யாரை, எதை, எவற்றை முதலிய வினாக்களை எழுப்பும் போது கிடைக்கும் விடையே வாக்கியத்தின் செயப்படுபொருள் ஆகும்.

எ.கா: 1. அருண் (எழுவாய்) வீட்டை (செயப்படுபொருள்) அடைந்தார். (பயனிலை)

2. அருண் (எழுவாய்) தூங்கினான். (பயனிலை)

3. இங்கே வா. (எழுவாய் குறிப்பாக உள்ளது)

## 3.2 வாக்கிய வகைகள் *(படிவம் 1)*

- தமிழ் வாக்கியங்களைக் கருத்து, அமைப்பு எனும் அடிப்படையில் பிரிக்கலாம்.
- கருத்து அடிப்படையில் நான்கு வகை வாக்கியங்கள் உள்ளன.

**அ) செய்தி வாக்கியம்** - தகவலை வெளிப்படுத்துதல்
எ.கா: நேற்று மழை பெய்தது.

**ஆ) வினா வாக்கியம்** - தகவலைப் பெறுதல்
எ.கா: இது யாருடைய வீடு?

**இ) விழைவு வாக்கியம்** - வேண்டுகோள், கட்டளை, சபித்தல், வாழ்த்துதல் ஆகிய அடிப்படையில் அமையும்.

எ.கா: 1. எனக்கு இந்நூலைத் தருக. (வேண்டுகோள்)
2. இன்று போய் நாளை வா. (கட்டளை)
3. ஒழிந்து போ! (சபித்தல்)
4. பல்லாண்டு வாழ்க! (வாழ்த்துதல்)

**உ) உணர்ச்சி வாக்கியம்** - உள்ளத்து உணர்ச்சியைக் காட்டுதல்.

எ.கா: 1. ஆஹா! என்னே அழகு! (வியப்பு)
2. ஐயோ! வலிக்கிறதே! (நோவு / துன்பம்)
3. ஐயோ! பாம்பு. (பயம்)

- அமைப்பு அடிப்படையில் வாக்கியங்களை மூவகையாகப் பிரிக்கலாம்.

**அ) தனி வாக்கியம்**

- ஓர் எழுவாய் அல்லது பல எழுவாய்கள் ஒரே பயனிலையைப் பெற்று வருவது தனி வாக்கியமாகும்.

எ.கா: 1. புத்தர் (எழுவாய்) அன்பைப் போதித்தார். (பயனிலை)

2. தென்னவனும் (எழுவாய்) பிரமிளாவும் (எழுவாய்) தங்கம் வென்றனர். (பயனிலை)

**ஆ) தொடர் வாக்கியம்** *(படிவம் 4/5)*

- ஓர் எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டு முடிவது தொடர் வாக்கியம்.

எழுவாய்

எ.கா: **இளவேந்தன்** பாடங்களை முறையாகப் **படித்தான்**; தேர்வினைச் சிறப்பாகச் **செய்தான்**.

பயனிலை பயனிலை

- ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கியங்கள் அதனால், இதனால், ஏனெனில், இருப்பினும் முதலிய இணைப்புச் சொற்களாலும் கருத்துத் தொடர்பாலும் இணைந்துவரின் அதுவும் தொடர் வாக்கியம் எனப்படும்.

எ.கா: நான் குறித்த நேரத்தில் வந்தேன்; எனினும், சுகுமாரனைக் காண முடியவில்லை.

**இ) கலவை வாக்கியம்** *(படிவம் 4/5)*

- ஒன்றுக்கு மேற்பட்ட தகவல்களை அல்லது செய்திகளை ஒரே வாக்கியத்தில் தருவது கலவை வாக்கியம்.
- கலவை வாக்கியத்தில் ஒரு முதன்மை வாக்கியத்தைச் சார்ந்து ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சார்பு வாக்கியங்கள் இடம் பெறும்.
- சில கலவை வாக்கியங்கள் 'என்னும்', 'என்றும்' முதலிய சொற்களைக் கொண்டிருக்கும்.

எ.கா: 1. நாடு முன்னேற வேண்டும் என்றால், மக்கள் அயராது உழைக்க வேண்டும்.

| | |
|---|---|
| முதன்மை வாக்கியம் | மக்கள் அயராது உழைக்க வேண்டும். |
| சார்பு வாக்கியம் | நாடு முன்னேற வேண்டும். |

2. வாழ்க்கை இன்பமும் துன்பமும் கலந்தது என்றும், சிக்கல் ஏற்பட்டால் அதைத் தீர்த்து வாழ்க்கையை நடத்த வேண்டும் என்றும் அறிஞர் அறிவுரை கூறுவர்.

| | |
|---|---|
| முதன்மை வாக்கியம் | அறிஞர் அறிவுரை கூறுவர். |
| சார்பு வாக்கியம் | 1. வாழ்க்கை இன்பமும் துன்பமும் கலந்தது.<br>2. சிக்கல் ஏற்பட்டால் அதைத் தீர்த்து வாழ்க்கையை நடத்த வேண்டும். |

## 3.3 நேர்க்கூற்று, அயற்கூற்று *(படிவம் 3/5)*

### அ) நேர்க்கூற்று

- ஒருவர் கூறியதை அவர் கூறியவாறே கூறுவது.
- நேர்க்கூற்றில் ஒருவர் கூறிய சொற்களை இரட்டை மேற்கோள் குறியிட்டுக் காட்ட வேண்டும்.

  எ.கா: "**<u>நான்</u>** என் வீட்டை விற்கப் **<u>போகிறேன்</u>**," என்று தென்னவன் கூறினான்.

### ஆ) அயற்கூற்று

- நேர்க்கூற்றிலுள்ள சொற்களை மட்டும் மாற்றிப் பொருள் மாறாதவாறு படர்க்கை இடத்திற்கு ஏற்பக் கூறுவது.
- அயற்கூற்றில் இரட்டை மேற்கோள் குறி இடப்படுவதில்லை.

  எ.கா: **<u>தன்</u>** வீட்டை விற்கப் **<u>போவதாகத்</u>** தென்னவன் கூறினான்.

➢ நேர்க்கூற்றை அயற்கூற்றாக மாற்றும் போதும் அயற்கூற்றை நேர்க்கூற்றாக மாற்றும் போதும் ஏற்படும் மாற்றங்களை அட்டவணை காட்டுகிறது.

| நேர்க்கூற்று | அயற்கூற்று |
|---|---|
| நான் | அவன் / அவள் / அவர் |
| என் | தன் / தம் |
| இது | அது |
| இவை | அவை |
| இங்கு | அங்கு |
| இந்த | அந்த |
| இவன் | அவன் |
| நீ | நான் / அவள் / அவன் |
| உன் | என் / தன் |
| அவன் | இவன் |
| இன்று | அன்று |
| இப்பொழுது | அப்பொழுது |
| நாளை | மறுநாள் |
| நேற்று | முன்னாள் |
| இதனால் | அதனால் |
| எங்கள் | தங்கள் |
| நாங்கள் | தாங்கள் |

## 3.4 சொற்றொடர் / தொடர் *(படிவம் 4/5)*

➢ ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வந்தால் சொற்றொடர் எனப்படும்.

➢ சொற்றொடர் இரு வகைப்படும். அவை:-

3.4.1 தொகைநிலைத் தொடர்
3.4.2 தொகாநிலைத் தொடர்

### 3.4.1 தொகைநிலைத் தொடர் *(படிவம் 4)*

ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் ஒரு சொல் போல் இயங்கும் போது, இடையில் சொல்லோ உருபோ மறைந்து வருதல் தொகை எனப்படும்.

எ.கா: கருங்கூந்தல் - கருமையான கூந்தல்
('ஆன' என்ற பண்புருபு மறைந்திருக்கிறது)

செடி கொடி - செடி<u>யும்</u> கொடி<u>யும்</u>
('உம்' என்ற இடைச்சொல் மறைந்திருக்கிறது)

➢ தொகைகளின் வகைகள்

(i) வேற்றுமைத்தொகை
(ii) வினைத்தொகை
(iii) பண்புத்தொகை / இரு பெயரொட்டுப் பண்புத்தொகை
(iv) உவமைத்தொகை
(v) உம்மைத்தொகை

### i) வேற்றுமைத்தொகை

வேற்றுமை உருபு மறைந்துள்ள சொற்றொடர் வேற்றுமைத்தொகையாகும்.

| தொகை | வேற்றுமைத் தொடர் | விளக்கம் |
|---|---|---|
| துணிகட்டு | துணியைக் கட்டு | 'ஐ'- இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்துள்ளது |
| தலை வணங்கு | தலையால் வணங்கு | 'ஆல்'-3ஆம் வேற்றுமை உருபு மறைந்துள்ளது |
| கல்லூரி சென்றான் | கல்லூரிக்குச் சென்றான் | 'கு' - 4ஆம் வேற்றுமை உருபு மறைந்துள்ளது |
| கண்ணீர் | கண்ணிலிருந்து வழிகின்ற நீர் | 'இல்', 'இருந்து' – 5ஆம் வேற்றுமை உருபு மறைந்துள்ளது |
| என் வீடு | என்னுடைய வீடு | 'உடைய' – 6ஆம் வேற்றுமை உருபு மறைந்துள்ளது |
| நீலாய்க் கல்லூரி | நீலாயில் இருக்கின்ற கல்லூரி | 'இல்' – 7ஆம் வேற்றுமை உருபு மறைந்துள்ளது |

- வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை

  - வேற்றுமை உருபோடு வேறொரு சொல்லும் மறைந்திருந்தால் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை எனப்படும்.

    எ.கா: பொற்குடம் = பொன்னால் செய்த குடம்

    = பொன்**<u>னால்</u>** – 'ஆல்' என்ற வேற்றுமை உருபு மறைந்துள்ளது

    = செய்த என்ற பயனைக் குறிக்கும் சொல்லும் மறைந்துள்ளது.

*(குறிப்பு: 'ஆல்' என்ற மூன்றாம் வேற்றுமை உருபும் செய்த என்ற பயனைக் குறிக்கும் சொல்லும் மறைந்துள்ளதால் உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை எனப்படும்.)*

### ii) வினைத்தொகை

- முதற்சொல் வினையடியாகவும் அடுத்து வரும் சொல் பெயர்ச்சொல்லாகவும் இருக்கும்.
- வினைத்தொகையில் காலம் காட்டும் உருபுகள் மறைந்திருக்கும். முக்காலத்தையும் உணர்த்தி நிற்கும்.

எ.கா: **ஊறுகாய்** = ஊறிய காய் (இறந்த காலம்)

**ஊறுகின்ற** காய் (நிகழ்காலம்)
**ஊறும்** காய் (எதிர்காலம்)

**குடி**நீர் = குடி**த்த** நீர் (இறந்த காலம்)
குடி**க்கின்ற** நீர் (நிகழ்காலம்)
குடி**க்கும்** நீர் (எதிர்காலம்)

**iii) பண்புத்தொகை**

- பண்பை விளக்கும் உருபுகளான 'ஆகிய', 'ஆன' ஆகியவை சொற்றொடர்களில் மறைந்து பொருள் தருமாயின் பண்புத்தொகை எனப்படும்.

எ.கா: செந்தாமரை = செம்மையாகிய தாமரை (வண்ணம்)
வட்டக்கல் = வட்டமான கல் (வடிவம்)
இன்சொல் = இனிமையான சொல் (தன்மை)

**இரு பெயரொட்டுப் பண்புத்தொகை**

- சொற்றொடர்களில் நிலைமொழியில் சிறப்புப்பெயரும் வருமொழியில் பொதுப்பெயரும் இணைந்து 'ஆகிய' என்ற பண்பு உருபு மறைந்து ஒரே பொருள் தருமாயின் இரு பெயரொட்டுப் பண்புத்தொகையாகும்.

எ.கா: தைத்திங்கள் = தை (சிறப்புப்பெயர்) + திங்கள் (பொதுப்பெயர்)
சாரைப்பாம்பு = சாரை(சிறப்புப்பெயர்) + பாம்பு (பொதுப்பெயர்)

**iv ) உவமைத்தொகை**

- சொற்றொடரில் 'போல', 'போன்ற', 'அன்ன', 'நிகர', 'ஒப்ப' முதலிய உவம உருபுகள் மறைந்திருந்து பொருள் தருமாயின் உவமைத்தொகையாகும்.

எ.கா: முத்துப் பல் (முத்து போன்ற பல்)
அன்ன நடை (அன்னம் போன்ற நடை)

**v) உம்மைத்தொகை**

- சொற்றொடர்களில் 'உம்' என்ற இடைச்சொல் மறைந்து பொருள் தருமாயின் உம்மைத்தொகை எனப்படும்.
-

எ.கா: அண்ணன் தம்பி - (அண்ணனும் தம்பியும்)
செடி கொடி - (செடியும் கொடியும்)
இரவு பகல் - (இரவும் பகலும்)

### 3.4.2 தொகாநிலைத் தொடர்

- சொற்றொடரில் உருபுகளோ சொற்களோ மறையாமல் வெளிப்படையாக இருந்து பொருள் தருமாயின் தொகாநிலைத் தொடர் எனப்படும்.
- தொகாநிலைத் தொடர் ஒன்பது வகைப்படும்.

| எண் | தொகாநிலைத் தொடர் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| 1. | எழுவாய்த் தொடர் | சேவல் கூவியது |
| 2. | விளித் தொடர் | கண்ணா வா ! |
| 3. | வேற்றுமைத் தொடர் | கடைக்குச் சென்றான் |
| 4. | வினையெச்சத் தொடர் | கூடி மகிழ்ந்தனர் |
| 5. | பெயரெச்சத் தொடர் | அறிந்த பெற்றோர் |
| 6. | வினைமுற்றுத் தொடர் | அழைத்தனர் உற்றார் |
| 7. | இடைச்சொற்றொடர் | - மற்றொன்று<br>- செடியும் கொடியும் |
| 8. | உரிச்சொற்றொடர் | சாலப் பேசினாள் |
| 9. | அடுக்குத் தொடர் | - வா வா<br>- தீ! தீ! |

## 4.0 புணரியல்

- இரண்டு சொற்கள் ஒன்றுபடப் புணர்வது புணர்ச்சி.
- இவ்விரண்டு சொற்களில் முதல் சொல்லை நிலைமொழி என்றும் இரண்டாவது சொல்லை வருமொழி என்றும் குறிப்பிடுவர்.
- நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் ஒன்றுபடப் புணர்வதே புணர்ச்சி.
- புணர்ச்சி இருவகைப்படும்.

அவை : i) இயல்பு புணர்ச்சி
ii) விகாரப் புணர்ச்சி

## 4.1 இயல்பு புணர்ச்சி

- நிலைமொழியில் (முதல் சொல்லில்) உள்ள இறுதி எழுத்தும் வருமொழியில் (இரண்டாவது சொல்லில்) உள்ள முதல் எழுத்தும் மாற்றமின்றிப் புணர்வது இயல்பு புணர்ச்சி ஆகும்.

எ.கா: i) மலர் + வளையம் = மலர்வளையம்
ii) வேல் + விழி = வேல்விழி

- நிலைமொழி ஈற்றில் மெய் எழுத்து இருந்து வருமொழி முதலில் உயிரெழுத்து வருமாயின் அம்மெய்யும் அவ்வுயிரும் இயல்பாகப் புணரும்.

**மெய் + உயிர்**

எ.கா: i) ஆ<u>ண்</u> + <u>அ</u>ழகன் = ஆ<u>ண</u>ழகன்
ii) மன<u>ம்</u> + <u>இ</u>ல்லை = மன<u>மி</u>ல்லை

## 4.2 விகாரப் புணர்ச்சி

- இரு சொற்கள் புணரும்போது நிலைமொழியின் ஈற்றிலோ (இறுதியிலோ) வருமொழியின் முதலிலோ மாற்றங்கள் ஏற்பட்டால் அது விகாரப் புணர்ச்சியாகும்.

விகாரப் புணர்ச்சி 3 வகைப்படும். அவை:-

i) தோன்றல்
ii) திரிதல்
iii) கெடுதல்

### 4.2.1 **தோன்றல்**

- நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது ஓர் எழுத்துப் புதிதாகத் தோன்றும்.

(அ) **உயிர் + உயிர்மெய்**

எ.கா: அ + தலைவன் = அ**த்**தலைவன்
இ + காடு = இ**க்**காடு

(ஆ) **சுட்டு + யகரம்**

எ.கா: அ + யானை = அ**வ்**யானை
இ + யாழ் = இ**வ்**யாழ்

(இ) **எகர வினா + யகரம்**

எ.கா: எ + யானை = எ**வ்**யானை

(ஈ) **ஓரெழுத்து ஒருமொழி + வல்லெழுத்து**

எ.கா: பூ + சோலை = பூ**ஞ்**சோலை
தை + திங்கள் = தை**த்**திங்கள்

(உ) **தனிக்குறிலை அடுத்து மெய்** வந்து, **வருமொழி உயிரெழுத்தில்** தொடங்கினால் நிலைமொழியின் இறுதியில் உள்ள மெய் இரட்டிக்கும்.

எ.கா: கண் + இமை = கண்**ணி**மை
மெய் + அடி = மெய்**யு**டி

(ஊ) **உடம்படுமெய்**
நிலைமொழி ஈற்றில் உயிரொலி (உயிரெழுத்து) இருந்து வருமொழி முதலில் ஏதாவது ஓர் உயிரெழுத்து இருந்தால் அவை இயல்பாகப் புணர இயலா. அவ்விரு உயிர்களையும் உடம்படுத்துவதற்குத் (இணைப்பதற்கு) தோன்றும் மெய்யெழுத்தே உடம்படுமெய்யாகும்.

உடம்படுமெய் இருவகைப்படும். அவை:-

- வகர உடம்படுமெய்
- யகர உடம்படுமெய்

**i) வகர உடம்படுமெய் (வ்)**
நிலைமொழி ஈற்றில் இ, ஈ, ஐ முதலிய உயிர் எழுத்துகளைத் தவிர்த்து, வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால் 'வ'கரம் தோன்றும்.

எ.கா: மா + இலை = மாவிலை
பூ + அரும்பு = பூவரும்பு

**ii) யகர உடம்படுமெய் (ய்)**
நிலைமொழி ஈற்றில் இ, ஈ, ஐ, முதலிய உயிர் எழுத்துகள் வந்து வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால் 'ய' கரம் தோன்றும்.

எ.கா: காலை + உணவு = காலையுணவு
கூலி + ஆள் = கூலியாள்

*குறிப்பு: 'ஏ' காரத்தில் 'வ'கரமும் 'ய'கரமும் தோன்றும்.*

தே + ஆரம் = தேவாரம்
(த்+ ஏ) + ஆ
வா

பயனே + இல்லை = பயனேயில்லை
(ன் + ஏ) + இ
யி

4.2.2 **திரிதல்** ***(படிவம் 3)***

- நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் புணரும்போது ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாகத் திரிந்து வருவது திரிதல் புணர்ச்சியாகும்.

அ) **ணகர, னகர மெய்யீறு வல்லினத்தோடு புணர்தல்**

i) ண் > ட் ஆகும் (க்,ச்,ப் முன் மட்டும்)

எ.கா: மண் + குடம் = மட்குடம்
மண் + பாண்டம் = மட்பாண்டம்

ii) ன் முன் த் > ற் ஆக மாறும்

எ.கா: பொன் + தகடு = பொற்றகடு

**ஆ) மகர ஒற்று (ம்) க்,ச்,த் ஆகிய வல்லினத்தோடு புணரும்போது இன மெல்லெழுத்தாகத் திரியும்.** *(படிவம் 2)*

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா: | மரம் | + கண்டான் | = | மர**ங்**கண்டான் |
| | மரம் | + சாய்ந்தது | = | மர**ஞ்**சாய்ந்தது |
| | வரம் | + தா | = | வர**ந்**தா |

**இ) லகர, ளகர, மெய்யீறு வல்லினத்தோடு புணர்தல்** *(படிவம் 3)*

i) ள் > ட் ஆகும் (க்,ச்,ப் முன் மட்டும்)

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா: | கள் | + குடம் | = | க<u>ட்</u>குடம் |
| | முள் | + செடி | = | மு<u>ட்</u>செடி |

ii) ல் > ற் ஆகும் (க்,ச்,ப் முன் மட்டும்)

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா: | கால் | + சட்டை | = | கா<u>ற்</u>சட்டை |
| | வேல் | + படை | = | வே<u>ற்</u>படை |
| | பால் | + குடம் | = | பா<u>ற்</u>குடம் |

iii) ல் முன் த் > ற் ஆகும்

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா: | கல் | + தூண் | = | கற்<u>**றூ**</u>ண் |
| | நல் | + தமிழ் | = | <u>ந**ற்ற**</u>மிழ் |

iv) ள் முன் த் > ட் ஆகும்

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா. | முள் | + தாள் | = | மு<u>ட்டா</u>ள் |

### 4.2.3 கெடுதல்

- நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் புணரும்போது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் கெடுவது (மறைவது) கெடுதல் புணர்ச்சியாகும்.

**அ) மகரம் + இடையினம்**

நிலைமொழி ஈற்றில் மகர மெய் வரும்பொழுது வருமொழி இடையினமாக இருக்குமாயின் அவ்விடத்தில் மகரம் கெடும்.

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா: | அறம் | + வினை | = | அறவினை |
| | காரம் | + வடை | = | காரவடை |

### ஆ) 'மை' ஈற்றுப் பண்புப்பெயர்ப் புணர்ச்சி

நிலைமொழியில் உள்ள 'மை' ஈறும் வருமொழியில் உள்ள முதலும் புணரும் போது 'மை' ஈறு மறைந்து வருமொழி இனவெழுத்துடன் திரிந்தும் தோன்றியும் வரும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எ.கா: | செம்மை | + | கோல் | = | செங்கோல் |
| | சிறுமை | + | ஊர் | = | சிற்றூர் |
| | தண்மை | + | நீர் | = | தண்ணீர் |

### இ) எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி (படிவம் 3/5)

i) ஒன்று முதல் பத்து வரையிலான நிலைமொழி எண்ணுப்பெயருடன் பத்து என்னும் வருமொழி இணைதல்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எ.கா: | இரண்டு | + | பத்து | = | இருபது |
| | மூன்று | + | பத்து | = | முப்பது |
| | நான்கு | + | பத்து | = | நாற்பது |
| | ஐந்து | + | பத்து | = | ஐம்பது |
| | ஆறு | + | பத்து | = | அறுபது |
| | ஏழு | + | பத்து | = | எழுபது |
| | எட்டு | + | பத்து | = | எண்பது |
| | ஒன்பது | + | பத்து | = | தொண்ணூறு |
| | பத்து | + | பத்து | = | பப்பத்து |

ii) 'பத்து' என்னும் நிலைமொழியுடன் ஒன்று முதல் பத்து வரையிலான வருமொழி எண்ணுப்பெயர் இணைதல்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எ.கா: | பத்து | + | ஒன்று | = | பதினொன்று |
| | பத்து | + | இரண்டு | = | பன்னிரண்டு |
| | பத்து | + | மூன்று | = | பதின்மூன்று |
| | பத்து | + | நான்கு | = | பதினான்கு |
| | பத்து | + | ஐந்து | = | பதினைந்து |
| | பத்து | + | ஆறு | = | பதினாறு |
| | பத்து | + | ஏழு | = | பதினேழு |
| | பத்து | + | எட்டு | = | பதினெட்டு |
| | பத்து | + | ஒன்பது | = | பத்தொன்பது |

iii) ஒன்று முதல் பத்து வரையிலான நிலைமொழியுடன் அதே வருமொழி எண்ணுப்பெயர் புணர்தல்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எ.கா: | ஒன்று | + | ஒன்று | = | ஒவ்வொன்று |
| | இரண்டு | + | இரண்டு | = | இவ்விரண்டு |
| | மூன்று | + | மூன்று | = | மும்மூன்று |
| | நான்கு | + | நான்கு | = | நந்நான்கு |
| | ஐந்து | + | ஐந்து | = | ஐவைந்து |
| | ஆறு | + | ஆறு | = | அவ்வாறு |

| | | |
|---|---|---|
| ஏழு | + ஏழு | = எவ்வேழு |
| எட்டு | + எட்டு | = எவ்வெட்டு |
| ஒன்பது | + ஒன்பது | = ஒன்பதொன்பது |
| பத்து | + பத்து | = பப்பத்து |

### ஈ) திசைப்புணர்ச்சி (படிவம் 5)

திசையைக் குறிக்கும் சொல்லைத் திசைப்பெயர் என்பர். அவ்வாறு திசைப்பெயரோடு வேறொரு திசைப்பெயரும் பிற சொல்லும் பின்வரும் முறையில் புணரும்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா: | வடக்கு | + கிழக்கு | = வடகிழக்கு |
| | வடக்கு | + மேற்கு | = வடமேற்கு |
| | தெற்கு | + கிழக்கு | = தென்கிழக்கு |
| | தெற்கு | + மேற்கு | = தென்மேற்கு |
| | கிழக்கு | + நாடு | = கீழ்நாடு |
| | மேற்கு | + நாடு | = மேனாடு / மேல்நாடு |
| | கிழக்கு | + திசை | = கீழ்த்திசை |
| | மேற்கு | + திசை | = மேற்றிசை / மேல்திசை |
| | தெற்கு | + நாடு | = தென்னாடு |

## 5.0 வலிமிகும் இடங்கள்

- சொற்றொடர்களில், வருமொழி 'க், ச், த், ப்' ஆகிய வல்லெழுத்துகளில் தொடங்கினால் நிலைமொழி ஈற்றில் சில இடங்களில் வல்லெழுத்து மிகும்.

- வருமொழியின் முதல் எழுத்து வல்லினமாக இருந்தால்தான் வல்லினம் மிகும்.
  குறிப்பு : நிலைமொழி - முதலில் நிற்கும் சொல்
  வருமொழி - அடுத்து நிற்கும் சொல்

5.1 அ, இ, என்னும் சுட்டெழுத்தின் பின்னும் 'எ' என்னும் வினா எழுத்தின் பின்னும் வலிமிகும்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா: | அ | + காட்சி | = அ**க்**காட்சி |
| | இ | + படம் | = இ**ப்**படம் |
| | எ | + சங்கம் | = எ**ச்**சங்கம் |

5.2 அந்த, இந்த, எந்த என்னும் சுட்டு வினா திரிபுகளின் பின் வலிமிகும்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா: | அந்த | + பையன் | = அந்த**ப்** பையன் |
| | இந்த | + தலைவன் | = இந்த**த்** தலைவன் |
| | எந்த | + குழந்தை | = எந்த**க்**குழந்தை |

5.3 அங்கு, இங்கு, எங்கு என்னும் சொற்களுக்குப் பின் வலிமிகும்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா: | அங்கு | + படித்தான் | = அங்கு**ப்** படித்தான் |
| | இங்கு | + கண்டான் | = இங்கு**க்** கண்டான் |
| | எங்கு | + சென்றான் | = எங்கு**ச்** சென்றான் |

5.4 அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களுக்குப் பின் வலிமிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா: | அப்படி | + சொல் | = அப்படி**ச்** சொல் |
| | இப்படி | + பேசு | = இப்படி**ப்** பேசு |
| | எப்படி | + கிடைத்தது | = எப்படி**க்** கிடைத்தது |

5.5 இனி, தனி, மற்ற என்னும் சொற்களுக்குப் பின் வலிமிகும்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா: | இனி | + கொடு | = இனி**க்** கொடு |
| | தனி | + சொல் | = தனி**ச்** சொல் |
| | மற்ற | + தலைவர் | = மற்ற**த்** தலைவர் |

5.6 வன்தொடர்க் குற்றியலுகரச் சொற்களுக்குப் பின் வலிமிகும்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா: | பாக்கு | + தோப்பு | = பாக்கு**த்** தோப்பு |
| | அச்சு | + தொழில் | = அச்சு**த்** தொழில் |
| | விட்டு | + கொடுத்தான் | = விட்டு**க்** கொடுத்தான் |
| | பத்து | + காசு | = பத்து**க்** காசு |
| | தப்பு | + கணக்கு | = தப்பு**க்** கணக்கு |
| | விற்று | + தந்தான் | = விற்றுத் தந்தான் |

5.7 தனிக் குற்றெழுத்தை அடுத்துவரும் ஆகாரத்தின் பின் வலிமிகும்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா: | கனா | + கண்டான் | = கனா**க்** கண்டான் |
| | பலா | + பழம் | = பலா**ப்** பழம் |

5.8 முற்றியலுகரச் சொற்களுக்குப் பின் வலிமிகும்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா: | முழு | + பாடல் | = முழு**ப்**பாடல் |
| | நடு | + தெரு | = நடு**த்**தெரு |

5.9 அரை, பாதி என்னும் எண்ணுப் பெயர்களின் பின் பண்புத்தொகையில் வலிமிகும்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா: | பாதி | + பணம் | = பாதி**ப்** பணம் |
| | அரை | + காசு | = அரை**க்** காசு |

5.10 அத்துணை, இத்துணை, எத்துணை என்னும் சொற்களின் பின் வலிமிகும்

| | | | |
|---|---|---|---|
| எ.கா: | இத்துணை | + சிறிய | = இத்துணை**ச்** சிறிய |
| | அத்துணை | + பெரிய | = அத்துணை**ப்** பெரிய |
| | எத்துணை | + கொடுமை | = எத்துணை**க்** கொடுமை |

5.11 ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தில் வலிமிகும்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா: | பேசா | + பையன் | = பேசா**ப்** பையன் |
| | ஓடா | + குதிரை | = ஓடா**க்** குதிரை |

5.12 அகர, இகர ஈற்று வினையெச்சங்களின் பின் வலிமிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா: | செய்ய | + சொல் | = | செய்ய**ச்** சொல் |
| | ஆடி | + பாடினாள் | = | ஆடி**ப்** பாடினாள் |

5.13 போய், ஆய், என, ஆக என்று முடியும் வினையெச்சங்களின் பின் வலிமிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா: | போய் | + பார்த்தான் | = | போய்**ப்** பார்த்தான் |
| | வருவதாய் | + கூறினான் | = | வருவதாய்**க்** கூறினான் |
| | என | + பேசினான் | = | என**ப்** பேசினான் |
| | இனிமையாக | + பாடினான் | = | இனிமையாகப் பாடினான் |

5.14 இரண்டாம் வேற்றுமை உருபு (ஐ) க்குப் பின் க்,ச்,த்,ப் வரின் வலிமிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா: | இராமனை | + பார் | = | இராமனை**ப்** பார் |
| | கையை | + தட்டு | = | கையை**த்** தட்டு |

5.15 நான்காம் வேற்றுமை உருபு (கு) க்குப் பின் க்,ச்,த்,ப் வரின் வலிமிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா: | அவனுக்கு | + சொல் | = | அவனுக்கு**ச்** சொல் |
| | விலைக்கு | + தந்தான் | = | விலைக்கு**த்** தந்தான் |

5.16 ஆறாம் வேற்றுமைத்தொகையில் நிலைமொழி அஃறிணையாக இருப்பின் வலிமிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா: | நாய் | + குட்டி | = | நாய்**க்** குட்டி |
| | யானை | + தந்தம் | = | யானை**த்** தந்தம் |
| | வண்டி | + சக்கரம் | = | வண்டி**ச்** சக்கரம் |

(குறிப்பு: மேலேயுள்ள அமைப்புகளில் ஆறாம் வேற்றுமை உருபுகளான அது, உடைய ஆகியவை மறைந்துள்ளன)

5.17 உவமைத்தொகையில் வலிமிகும்.

இரு சொற்கள் புணர்ந்து ஒரு சொல் போல இயங்கும்போது இடையில் உருபோ சொல்லோ மறைந்து வருவது தொகையாகும். உவம உருபுகளான போன்ற, அன்ன, ஒப்ப, நிகர முதலியவை மறைந்துள்ள தொகை உவமைத்தொகையாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா: | மலை | + தோள் | = | மலை**த்**தோள் |
| | மலர் | + கை | = | மலர்**க்**கை |

5.18 பண்புத்தொகையில் வலிமிகும்

எ.கா:    வெள்ளை + தாள் = வெள்ளை**த்**தாள் (வெண்மையான தாள்)
சதுரம் + பலகை = சதுர**ப்**பலகை (சதுரமான பலகை)

5.19 இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வலிமிகும்.

இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் ஒரே பொருளைக் குறிக்கும் சிறப்புப் பெயரும் பொதுப்பெயரும் இணைந்து வரும்.

| எ.கா: **சிறப்புப்பெயர்** | | **பொதுப்பெயர்** | | **பண்புத்தொகை** |
|---|---|---|---|---|
| தை | + | திங்கள் | = | தை**த்**திங்கள் |
| வாழை | + | பழம் | = | வாழை**ப்**பழம் |

5.20 ஓரெழுத்து ஒருமொழிக்குப் பின் வலிமிகும்.

ஓரெழுத்து, தனித்து நின்று பொருள் தருமாயின், அஃது ஓரெழுத்து ஒருமொழியாகும். ஓரெழுத்து ஒருமொழிக்குப்பின் வருமொழி முதலில் க், ச், த், ப் வரின் வலிமிகும்.

எ.கா:    தீ + சட்டி = **தீச்**சட்டி
கை + குட்டை = கை**க்**குட்டை
பூ + கூடை = பூ**க்**கூடை

## 6.0 வலிமிகா இடங்கள்

- சொற்றொடர்களில், வருமொழி ‘க், ச், த், ப்’ ஆகிய வல்லெழுத்துகளில் தொடங்கினால் நிலைமொழி ஈற்றில் சில இடங்களில் வலிமிகாது.

6.1 அது, இது, அவை, இவை என்னும் சுட்டுப் பெயர்களின் பின் வலிமிகாது.

எ.கா:    இது + படகு = இது படகு
அது + காடு = அது காடு
அவை + படகுகள் = அவை படகுகள்

6.2 ஆ,ஓ,ஏ,யா என்னும் வினா எழுத்தின் பின் வலிமிகாது.

எ.கா:    அவனா + சொன்னான் = அவனா சொன்னான்
எங்கே + பார்த்தாய் = எங்கே பார்த்தாய்

6.3 அன்று, இன்று, என்று என்பனவற்றின் பின் வலிமிகாது

எ.கா:    அன்று + சென்றான் = அன்று சென்றான்
இன்று + தந்தார் = இன்று தந்தார்
என்று + கேட்டார் = என்று கேட்டார்

6.4 ‘படி’, ‘மாறு’ சேர்ந்துவரும் வினையெச்சங்களின் பின் வலிமிகாது.

எ.கா:    கேட்கும்படி + பணித்தார் = கேட்கும்படி பணித்தார்
பேசுமாறு + சொன்னார் = பேசுமாறு சொன்னார்

6.5 '-ன்று, -ந்து, -ண்டு, -ய்து' என்று முடியும் வினையெச்சங்களின் பின் வலிமிகாது.

| | | | |
|---|---|---|---|
| எ.கா: | என்று | + கத்தினார் | = என்று கத்தினார் |
| | அறிந்து | + கொண்டார் | = அறிந்து கொண்டார் |
| | செய்து | + காட்டினார் | = செய்து காட்டினார் |
| | கொண்டு | + சென்றான் | = கொண்டு சென்றான் |

6.6 உயர்திணைப் பெயர், பொதுப்பெயர்களின் பின் வலிமிகாது.

| | | | |
|---|---|---|---|
| எ.கா: | தம்பி | + சிறியவன் | = தம்பி சிறியவன் |
| | பறவை | + பறந்தது | = பறவை பறந்தது |

6.7 அங்கே, இங்கே, எங்கே என்று ஏகாரத்தில் முடியும் சுட்டு, வினாச் சொற்களின் பின் வலிமிகாது.

| | | | |
|---|---|---|---|
| எ.கா: | அங்கே | + கொடு | = அங்கே கொடு |
| | இங்கே | + பார் | = இங்கே பார் |
| | எங்கே | + செல்கிறாய் | = எங்கே செல்கிறாய் |

6.8. எது, ஏது, யாது, யாவை என்னும் வினாச் சொற்களின் பின் வலிமிகாது.

| | | | |
|---|---|---|---|
| எ.கா: | எது | + கேட்பாய் | = எது கேட்பாய் |
| | ஏது | + கண்டாய் | = ஏது கண்டாய் |
| | யாது | + பயன் | = யாது பயன் |
| | யாவை | + தந்தான் | = யாவை தந்தான் |

6.9 அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு என்னும் அளவுப் பெயர்களின் பின் வலிமிகாது.

| | | | |
|---|---|---|---|
| எ.கா: | அவ்வளவு | + பெரிய | = அவ்வளவு பெரிய |
| | இவ்வளவு | + சிறிய | = இவ்வளவு சிறிய |
| | எவ்வளவு | + பணம் | = எவ்வளவு பணம் |

6.10 பெயரெச்சத்தின் பின் வலிமிகாது.

| | | | |
|---|---|---|---|
| எ.கா: | பார்த்த | + படம் | = பார்த்த படம் |
| | பறந்த | + பறவை | = பறந்த பறவை |
| | உதைத்த | + பந்து | = உதைத்த பந்து |

6.11 எழுவாய்த் தொடரில் வலிமிகாது

| | | | |
|---|---|---|---|
| எ.கா: | தாமரை | + பூத்தது | = தாமரை பூத்தது |
| | பூனை | + பாய்ந்தது | = பூனை பாய்ந்தது |
| | சேவல் | + கூவியது | = சேவல் கூவியது |

6.12 விளித் தொடரில் வலிமிகாது

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா: | தம்பீ | + போ | = | தம்பீ போ |
| | இராமா | + கேள் | = | இராமா கேள் |
| | அம்மா | + கொடுங்கள் | = | அம்மா கொடுங்கள் |

6.13 மூன்றாம் வேற்றுமை உருபுகளான ஒடு, ஓடு ஆகியவற்றின் பின் வலிமிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா: | மணிவிழியொடு | + பாடினான் | = | மணிவிழியொடு பாடினான் |
| | தம்பியோடு | + சென்றான் | = | தம்பியோடு சென்றான் |

6.14 ஐந்தாம் வேற்றுமை உருபுகளான இருந்து, நின்று என்பனவற்றின் பின் வலிமிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா: | கூரையிலிருந்து | + குதித்தான் | = | கூரையிலிருந்து குதித்தான் |
| | வீட்டினின்று | + சென்றான் | = | வீட்டினின்று சென்றான். |

6.15 ஆறாம் வேற்றுமை உருபுகளான அது, உடைய என்பனவற்றின் பின் வலிமிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா: | பாலனது | + கை | = | பாலனது கை |
| | என்னுடைய | + தட்டு | = | என்னுடைய தட்டு |

6.16 இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வலிமிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா: | விறகு | + கட்டினாள் | = | விறகு கட்டினாள் |
| | கனி | + தின்றான் | = | கனி தின்றான் |
| | கணை | + தொடுத்தார் | = | கணை தொடுத்தார் |
| | தேன் | + குடித்தான் | = | தேன் குடித்தான் |

*(குறிப்பு: இத்தொடர் அமைப்புகளில் இரண்டாம் வேற்றுமை உருபான ஐ மறைந்துள்ளதால் இவை இரண்டாம் வேற்றுமைத்தொகையாகும்.)*

6.17 ஆறாம் வேற்றுமைத்தொகையில் நிலைமொழி உயர்திணையாய் இருப்பின் வலமிகாது.

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா: | தம்பி | + சட்டை | = | தம்பி சட்டை |
| | குழந்தை | + கை | = | குழந்தை கை |

*(குறிப்பு: இத்தொடர் அமைப்புகளில் ஆறாம் வேற்றுமை உருபுகளான அது, உடைய ஆகியவை மறைந்துள்ளதால் இவை ஆறாம் வேற்றுமைத்தொகையாகும்.)*

6.18 உம்மைத்தொகையில் வலிமிகாது.

தொகைச் சொல்லில் **<u>உம்</u>** என்னும் உருபு மறைந்திருப்பதால் உம்மைத்தொகை எனப்படும். அதில் வலிமிகாது.

எ.கா:

| **உம்மை உருபுடன்** | **உம்மைத் தொகை** |
|---|---|
| செடியும் கொடியும் | செடி கொடி |
| காயும் கனியும் | காய் கனி |
| வெற்றியும் தோல்வியும் | வெற்றி தோல்வி |
| நன்மையும் தீமையும் | நன்மை தீமை |

6.19 வினைத்தொகையில் வலிமிகாது.

வினைச்சொல்லின் பகுதியும் பெயர்ச் சொல்லும் சேர்ந்து வருவதே வினைத்தொகையாகும். இது மூன்று காலங்களையும் காட்டவல்லது என்பது இலக்கண ஆசிரியர்களின் கூற்றாகும். இருப்பினும் இத்தொகையை அமைப்பு அடிப்படையில் தெரிந்து கொள்வது சிறப்பாகும்.

வினையடி + பெயர் = வினைத்தொகை

எ.கா:

| | | | | |
|---|---|---|---|---|
| குடி | + | நீர் | = | குடிநீர் |
| வீசு | + | தென்றல் | = | வீசுதென்றல் |
| பாடு | + | பொருள் | = | பாடுபொருள் |
| ஆடு | + | கொடி | = | ஆடுகொடி |
| செய் | + | தொழில் | = | செய்தொழில் |

## 7.0 நிறுத்தக் குறிகள்

- தமிழ் மொழியில் வழங்கி வரும் நிறுத்தக் குறிகள் பிரிப்பொலிப்பு, பொருள், தன்மை, மேற்கோள் ஆகிய அடிப்படையில் அமைந்துள்ளன.

**அ) காற்புள்ளி ( , )**

- சொற்களைத் தனித்தனியாகவோ அடுக்கடுக்காகவோ பிரிக்கும்போது காற்புள்ளி இடவேண்டும்.

  எ.கா: அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பாலைக் கொண்டது திருக்குறள்.

- ஆகவே, எனவே, ஆனால், ஏனென்றால் முதலிய இடைச்சொற்களுக்குப்பின் காற்புள்ளி இடவேண்டும்.

  எ.கா: முகிலன் கடுமையாக உழைத்தான். எனவே, வாழ்க்கையில் முன்னேறினான்.

- விளிச்சொற்களுக்குப் பின் காற்புள்ளி இடவேண்டும்.

  எ.கா: கடவுளே, கருணை காட்டுக.

- முகவரிகளை எழுதும்போது காற்புள்ளி இடவேண்டும்.

  எ.கா: மு.தமிழன்பன்,
  37, ஜாலான் அக்கார்,
  தாமான் அமான்,
  42700 பந்திங்,
  சிலாங்கூர்.

- கலவை வாக்கியங்களில் கருத்துகளைப் பிரித்துக் காட்டுவதற்குக் காற்புள்ளி இடவேண்டும்.

  எ.கா: நாடகம் சிறப்பாக அமைய வேண்டுமானால், ஆழமான கருத்துகள், சிந்தனையைத் தூண்டும் காட்சிகள் இடம்பெற வேண்டும்.

- நேர்க்கூற்றின் இறுதியில் காற்புள்ளி இடவேண்டும்.

  எ.கா: "நான் நூல் நிலையத்திற்கு வருகிறேன்," என்று குமணன் கூறினான்.

**ஆ) அரைப்புள்ளி ( ; )**

- தொடர் வாக்கியங்களில் பயனிலைகளுக்குப்பின் அரைப்புள்ளி இடவேண்டும்.

  எ.கா: 1. ஒன்றுபட்டு வாழ்ந்தால் சிறப்பாக வாழலாம் என்னும் கொள்கை வீட்டுக்கும் பொருந்தும்; நாட்டுக்கும் பொருந்தும்.

  2. திருமாறன் வீட்டுக்கு வந்ததும் வீட்டுப்பாடங்களைச் செய்து முடிக்க எண்ணினான்; ஆனால், வேலை மிகுதியால் அதை மறந்து விட்டான்.

**இ) முக்காற்புள்ளி ( : )**

- வாக்கியத்தில் கூறிய ஒன்றை விரித்துக் கூறும்போது முக்காற்புள்ளி இடவேண்டும்.

  எ.கா: வாழ்வு இரு கூறுகளைக் கொண்டது: ஒன்று உயிர் வாழ்வு, மற்றொன்று உடல் வாழ்வு.

➢ வாக்கியத்தில் ஒரு கருத்தை விளக்கவோ அதற்கு இசைந்த இன்னொரு கருத்தைக் குறிக்கவோ முக்காற்புள்ளி இடவேண்டும்.

எ.கா: உடல் நலத்தைப் பாதுகாக்க எல்லா வகைகளிலும் முயற்சி செய்: உடல் நலம் இல்லாவிட்டால் வாழ்க்கையில் மகிழ்ச்சியே இருக்காது.

**ஈ) முற்றுப்புள்ளி ( . )**

➢ வாக்கிய முடிவில் முற்றுப்புள்ளி இடவேண்டும்.
➢ வாக்கியத்தில் பொருள் முடிந்திருப்பதைக் காட்டுவது முற்றுப்புள்ளி.

எ.கா: அறிவியல் அறிஞர்கள் பல அரிய கண்டுபிடிப்புகளை உருவாக்கி உள்ளனர்.

➢ சொற்சுருக்கங்களில் முற்றுப்புள்ளி இடவேண்டும்.

எ.கா: 1. பெ.ஆ.ச. (பெற்றோர் ஆசிரியர் சங்கம்)
2. திரு. (திருவாளர்)

**உ) உணர்ச்சிக்குறி ( ! )**

➢ நகை, அழுகை, அச்சம், பெருமகிழ்ச்சி, கோபம், பெருமிதம் போன்ற தன்மைகளை வெளிப்படுத்தும் சொற்களுக்குப் பின் உணர்ச்சிக்குறி இடவேண்டும்.
➢ உணர்ச்சிக்குறிகள் வாக்கிய இறுதியிலும் அமையலாம்.

எ.கா: 1. ஐயோ! பாவம்! இவன் நல்லவனாயிற்றே!
2. உன்னால் முடியும் தம்பி!

**ஊ) ஒற்றை மேற்கோள் குறி ( ‘ ’ )**

➢ மற்றவரின் கருத்தையோ, மொழியையோ சொற்றொடரில் எடுத்தாளும்போது ஒற்றை மேற்கோள் குறி இடவேண்டும்.

எ.கா: தமிழ் மொழி இனிமையும் இளமையும் கொண்டது; வளம் நிறைந்தது. *‘இவள் என்று பிறந்தவள்... என்ற இயல்பை அறியாதவள் எங்கள் தாய்’* என்று பாரதியாரும் கூறிச் சென்றுள்ளார்.

➢ ஏதேனும் ஒரு குறிப்பைச் சிறப்பாக எடுத்துக்காட்ட ஒற்றை மேற்கோள் குறி இடவேண்டும்.

எ.கா: ‘தொல்காப்பியம்’ நம் பழந்தமிழ் இலக்கியம் ஆகும்.

### எ) இரட்டை மேற்கோள் குறி ( “ ” )

- ஒருவர் கூறிய சொற்களை அப்படியே எடுத்தாளும் போது, அவர் கூறிய மொழிகளின் தொடக்கம், முடிவு ஆகிய இரு இடங்களிலும் இரட்டை மேற்கோள் குறி இடவேண்டும்.

  எ.கா: இளமாறன்,“ அப்பா நீங்கள் கூறிய அறிவுரைபடியே நான் நடக்கிறேன்,” என்றான்.

### ஏ) வினாக்குறி ( ? )

- ஒரு வாக்கியம் வினா வாக்கியமாக அமையின் அதற்கு வினாக்குறி இடவேண்டும்.

  எ.கா: 1. இந்த வேலையைச் செய்தவர் யார்?
  2. ஏன் நீ செல்லவில்லை?

## 8.0 யாப்பிலக்கணம்

### 8.1 சந்தச்சொற்கள் *(படிவம் 1/2)*

- கவிதையில் ஒரே ஓசையில் முடிகின்ற சொற்கள் சந்தச் சொற்களாகும்.
- சந்தச்சொற்கள் கவிதைக்கு இனிய ஓசை நயத்தைத் தருகின்றன.

எ.கா: உழைப்பில் கிடைப்பது **பணம்**
உறவினை வளர்ப்பது **குணம்**
இழிவினை அளிப்பது **சினம்**
அன்றாடம் என்பது **தினம்**

(பணம் – குணம் - சினம் - தினம் ஆகியவை சந்தச் சொற்கள்)

### 8.2 மோனை *(படிவம் 3/4/5)*

- மோனை என்றால் முதல் எழுத்து ஒன்றித்து வருதல் என்று பொருள்படும்.
- கவிதையில் அடிதோறும் முதல் எழுத்து ஒரே இனமாக இருப்பின் **அடிமோனை** எனப்படும்.

எ.கா: பழனி மலைக்குச் சென்று வந்தேன்
பஞ்சா மிருதம் கொண்டு வந்தேன்

**தீ**வினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
**தீ**வினை என்னுஞ் செருக்கு. ***(திருக்குறள்)***

- கவிதையில் ஒவ்வொரு சீரிலும் முதல் எழுத்து ஒரே இனமாக இருந்தால் **சீர்மோனை** எனப்படும்.

  எ.கா: **க**ற்க **க**சடற **க**ற்பவை **க**ற்றபின்
  நிற்க அதற்குத் தக. ***(திருக்குறள்)***

## 8.3 **எதுகை** *(படிவம் 3/4/5)*

- கவிதையில் அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒரே இனமாக ஒன்றி வருவது எதுகையாகும்.

எ.கா: 1. தூயவர் நெஞ்சம் படர்முல்லை - அவர்
சொல்லுக்குத் தோல்வியில் இடமில்லை
தீயவர் வாழ்வில் விடிவில்லை - அவர்
செயலுக்கும் சொல்லுக்கும் தொடர்பில்லை

2. மூங்கில் வெட்டி வாழ்ந்திடுவார்
முனைந்து மூங்கில் வெட்டிடுவார் !
ஆங்கு அவற்றைக் கட்டுக்கட்டி
ஆலை நோக்கிச் செலுத்திடுவார் !

## 8.4 **அசை** *(படிவம் 5)*

- எழுத்துகள் தனித்தோ இணைந்தோ சரியான ஒலியுடன் சீருக்கு உறுப்பாகி நின்றால் அசை எனப்படும்.
- அசை பிரிக்கும் போது பொருள் பார்க்கக்கூடாது.
- சீர்களைத் தனித்தனியாக அசை பிரித்தல் வேண்டும்.




எ.கா: (i) அண் / ணன்
*(நேர்) (நேர்)*

(ii) மலே / சியா
*(நிரை) (நிரை)*

(iii) கயற் / கண் / ணி
*(நிரை) (நேர்) (நேர்)*

(iv) வசிக் / கின் / றன
*(நிரை) (நேர்) (நிரை)*

**<u>இலக்கண மேற்கோள் நூல்கள்</u>**:


1. இரத்தின சபாபதி.பி., (2001), **<u>தமிழ்க் கல்வி</u>**, அம்சா பதிப்பகம், சென்னை.

2. தட்சிணா மூர்த்தி.வை., (2000), **<u>எளிய தமிழ் இலக்கணம்</u>**, திருவரசு புத்தக நிலையம், சென்னை.

3. பரந்தாமனார்.அ.கி., (2002), **<u>நல்ல தமிழ் எழுத வேண்டுமா?</u>** பாரி நிலையம், சென்னை.

4. பரமசிவம்.சொ., (2003), **<u>நற்றமிழ் இலக்கியம்</u>**, பட்டுப் பதிப்பகம், சென்னை.

5. - (1990), **<u>நன்னூல் காண்டிகை உரை (சொல்லதிகாரம்)</u>** கழக வெளியீடு, சைவசித்தாந்த நூற்பதிப்பகக் கழகம்.

6. - (1990), **<u>நன்னூல் காண்டிகை உரை (எழுத்ததிகாரம்)</u>** கழக வெளியீடு, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

7. தேவநேயப்பாவாணர் (2000), **<u>இயற்றமிழ் இலக்கணம்</u>**, தமிழ்மண் பதிப்பகம், சென்னை.

8. அகத்தியலிங்கம்.ச., (2002), **<u>தமிழ்மொழி அமைப்பியல்</u>**, மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்.

9. மாணிக்கம்.அ., (1988), **<u>பவணந்தி முனிவரின் நன்னூல் காண்டிகையுரை</u>**, பூம்புகார் பதிப்பகம், சென்னை.

10. ஆறுமுக நாவலர், (1993), **<u>தமிழ் இலக்கணம்</u>**, முல்லை பதிப்பகம், சென்னை

11. செயராமன்.ந.வீ., (2000) **<u>இலகு தமிழ் இலக்கணம்</u>**, உமா பதிப்பகம், கோலாலம்பூர்

**கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு**
**இலக்கண இலக்கிய விளக்கவுரை**
**KBSM**
**இலக்கியம்**

## <u>திருக்குறள்</u>

### புகுமுக வகுப்பு

1. மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனுஞ் சொல் (70)

மகன் தந்தைக்கு ஆற்றவேண்டிய கடமை யாதெனில், அவனை மகனாகப் பெற அவர் என்ன தவம் செய்தாரோ எனப் பிறர் புகழ்ந்து போற்றும்படி நடந்து கொள்வதே ஆகும்.

கருத்து : பெற்றோருக்குப் புகழ் சேர்க்கும் வகையில் பிள்ளைகள் நடந்துகொள்ள வேண்டும்.

2. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர் (393)

கற்றவர்கள், கண்ணுள்ளவர்கள் எனச் சொல்லத் தகுதியுடையவர்கள். கல்லாதவர்கள் முகத்தில் இருப்பது புண்கள் எனக் கருதப்படுகிறது.

கருத்து : கல்லாதவர்கள் கண்ணிருந்தும் குருடர்களாகக் கருதப்படுவார்கள்.

3. யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு (127)

எதை அடக்கியாளாவிட்டாலும் நாக்கை அடக்கியாள வேண்டும். அவ்வாறு அடக்கியாளாவிட்டால் குற்றமான சொல்லைப் பேசித் துன்பப்பட நேரும்.

கருத்து : நாவை அடக்கியாள வேண்டும்.

4. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும் (138)

நன்னடத்தை இன்பமான நல்வாழ்க்கைக்குக் காரணமாக இருக்கும்; தீய நடத்தை எப்பொழுதும் துன்பத்தைக் கொடுக்கும்.

கருத்து : நன்னடத்தை நல்வாழ்விற்கும் தீய நடவடிக்கை துன்பத்திற்கும் வழிவகுக்கும்.

5. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று (108)

ஒருவர் செய்த நன்மையை எந்நாளும் மறக்கக்கூடாது. அவர் செய்த தீமையை உடனே மறந்துவிடுவது நல்லது.

கருத்து : பிறர் செய்யும் நன்மையை மறக்கலாகாது. ஆனால், தீமையை உடனே மறந்துவிட வேண்டும்.

6. தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல் (67)

தந்தை மகனுக்கு ஆற்ற வேண்டிய கடமை யாதெனில், அம்மகனைக் கற்றறிந்தவர் அவையில் மற்றவர்களைக் காட்டிலும் சிறந்து விளங்கச் செய்தலாகும்.

கருத்து : கற்றோர் மத்தியில் பிள்ளைகளைச் சிறந்த அறிஞர்களாக்குவது பெற்றோரின் கடமை.

**படிவம் 1**

1. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய் (69)

தன் மகனை நற்பண்பு நிறைந்தவன் எனப் பிறர் சொல்லக் கேள்வியுறும் தாய், தான் அவனைப் பெற்றெடுத்த காலத்தில் அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் அதிகமான மகிழ்ச்சி அடைவாள்.

கருத்து : மகன் சான்றோன் எனக் கேள்வியுறும் தாய் பெருமகிழ்ச்சி அடைவாள்.

2. தீயினாற் சுட்டப்புண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு (129)

நெருப்பினால் சுட்ட புண் வெளியில் தழும்பு இருந்தாலும் உள்ளே ஆறிவிடும். ஆனால், உள்ளம் புண்படும்படி பேசுகின்ற பேச்சால் ஏற்படுகின்ற பாதிப்பு என்றும் மறையாது.

கருத்து : பிறருடைய மனம் புண்படும்படி பேசக்கூடாது.

3. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் (131)

ஒழுக்கம் ஒரு மனிதனுக்குப் பெருஞ் சிறப்பைத் தரவல்லது. இவ்வொழுக்கத்தை உயிரினும் மேலாகக் கருதிக் காக்க வேண்டும்.

கருத்து : சிறப்பைத் தரும் ஒழுக்கத்தை உயிரினும் மேலாகப் பேண வேண்டும்.

*படிவம் 2*

1. புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன் (237)

தமக்குப் புகழ் உண்டாகுமாறு வாழ முடியாதவர் தம்மைத் தாமே நொந்து கொள்ளாமல், தம்மை இகழ்கின்றவரை நொந்து கொள்வதால் பயனில்லை.

கருத்து : தன் புகழின்மைக்குத் தானே காரணம்; பிறரல்ல.

2. இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல் (415)

வழுக்கும் சேற்று நிலத்தில் நடப்பார்க்கு ஊன்றுகோல் உதவுவதுபோல வாழ்க்கையில் வழுக்கல் நேரும்போது ஒழுக்கமுடையவரின் அறிவுரையானது துணை நிற்கும்.

கருத்து : துன்பம் நேரும்போது சான்றோரின் அறிவுரை கைக்கொடுக்கும்.

3. ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை (594)

சோர்வு இல்லாத ஊக்கம் உடையவனிடத்தில் செல்வமானது தானே அவன் உள்ள இடத்திற்கு வழி கேட்டுக் கொண்டு போய்ச் சேரும்.

கருத்து : ஊக்கம் உடையவனிடம் செல்வம் தானே வந்து சேரும்.

*படிவம் 3*

1. குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். (504)

ஒருவனுடைய குணங்களை ஆராய்ந்து, பிறகு குற்றங்களையும் ஆராய்ந்து, அவற்றுள் மிகுதியானவை எவையென அறிந்து, மிகுந்திருப்பனவற்றால் அவனைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.

கருத்து : ஒருவரின் குணநலன்களை ஆராய்ந்து எத்தகையோர் எனத் தீர்மானம் செய்யலாம்.

2. விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். (648)

கருத்துகளை முறையாகவும் இனிமையாகவும் சொல்லும் ஆற்றலுள்ளவர் சொன்ன வேலையை உலகத்தார் உடனே செய்வார்கள்.

கருத்து : இனிமையாகப் பேசக்கூடியவர் இடும் வேலையைப் பிறர் உடனே செய்வர்.

3. சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். (664)

ஒரு செயலைச் செய்து முடித்துவிடுவதாகச் சொல்வது எல்லாருக்கும் சுலபமானது. ஆனால், அதனைச் சொன்னபடி செய்வதுதான் கடினமானது.

கருத்து : சொல்வது சுலபம்; செய்வது கடினம்

*படிவம் 4*

1. உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார்
உடையது உடையரோ மற்று. (591)

ஊக்கம் உடையவர்கள்தாம் செல்வம் உடையவர்களாகக் கருதப்படுவார்கள். ஊக்கம் இல்லாதவர்கள் எவ்வகை செல்வங்களைக் கொண்டிருந்தாலும் உடையவர்களாக ஆகமாட்டார்கள்.

கருத்து : ஊக்கம் உடையவர்கள் எல்லாம் உடையவர்கள் ஆவர்.

2. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. (783)

படிக்கப் படிக்க ஒரு நயமான நூலின் சிறப்பு அதிகரிப்பதுபோல, நல்ல குணமுடையவர்களின் நட்பு பழகப் பழக இன்பத்தை அதிகரிக்கும்.

கருத்து : பண்புடையவர்களின் நட்பு பெரும் பயன் தரும்.

3. இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல். (517)

இந்தத் தொழிலை இன்னின்ன காரணத்தால் இவன் செய்து முடிக்கத்தக்கவன் என்பதை ஆராய்ந்தறிந்து அத்தொழிலை அவனிடம் ஒப்படைத்துவிட வேண்டும்.

கருத்து : ஒருவரின் திறமையறிந்து ஒரு பணியை மேற்கொள்ளும் பொறுப்பை வழங்க வேண்டும்.

**படிவம் 5**

1. எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு. (426)

உலகப் போக்கு எப்படி இருக்கின்றதோ, அந்த உலகத்தோடு பொருந்திய வகையில் தானும் அதைக் கடைப்பிடித்து அவ்வாறு நடப்பதே அறிவாகும்.

கருத்து : உலகத்தோடு பொருந்தி வாழ்வது அறிவாகும்

2. நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு. (784)

ஒருவரோடு ஒருவர் சிரித்து மகிழ்வதற்காக மட்டும் அல்ல நட்பு; நட்பு என்பது ஒருவர் குற்றம் செய்யும் போது அதை எடுத்துக்காட்டி, இடித்துக்கூறி தீமையை விளக்குவதேயாகும்.

கருத்து : தவறுகளைச் சுட்டிக் காட்டித் திருத்துவதே உண்மையான நட்பு ஆகும்.

3. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்தோ சால்பு. (987)

தமக்குத் துன்பம் செய்தவருக்கும் இன்பமே செய்யாவிடின் சான்றாண்மை என்ற பெருங் குணம் இருந்தும் பயனில்லை.

கருத்து : தீங்கு செய்தவருக்கும் நன்மை செய்வதே சான்றோரின் பண்பு.

## <u>பழமொழி</u>

## புகுமுக வகுப்பு

1. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

ஒன்றிணைந்து ஒருமித்துச் செயல்பட்டால் நல்வாழ்வு அமையும்.

2. தர்மம் தலை காக்கும்

நாம் செய்கின்ற அறச்செயல்கள் நமக்குத் துன்பம் நேர்கின்ற பொழுது நம்மைக் காத்து நிற்கும்.

3. இளமையிற் கல்வி சிலைமேல் எழுத்து

இளமைக் காலத்தில் கற்கப்படும் கல்வி, சிலையில் பொறிக்கப்பட்ட எழுத்துப் போல அழியாது மனத்தில் நிலைத்திருக்கும்.

4. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

ஒருவருடைய மன நிலையை அவர் வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும் முகம் காட்டிவிடும்.

5. வெறுங்கை முழம் போடுமா?

வெறுங்கையைக் கொண்டு எதனையும் அளக்க முடியாது. அதே போன்று, மூலதனம் இல்லாமல் எச்செயலையும் செய்ய முடியாது.

## படிவம் 1

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

   ஒருவருடைய மன நிலையை அவர் வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும் முகம் காட்டிவிடும்.

2. ஆடமாட்டாதவள் கூடம் கோணல் என்றாளாம்

   தம் குறையையும் இயலாமையையும் சொல்லத் துணிவு இல்லாமல், அதற்காக மற்றவரையும் மற்றவற்றையும் குறை கூறுவர்.

3. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

   கல்வியில் திறமையும் புலமையும் உள்ள ஒருவர் எங்குச் சென்றிடினும் சிறப்பிக்கப்படுவார்.

4. கண்டதைக் கற்க பண்டிதனாவான்

   பல நூல்களைப் படிப்பதனால் அறிஞனாகத் திகழலாம்.

5. தன் கையே தனக்கு உதவி

   ஒவ்வொருவருக்கும் தன்னம்பிக்கையும் சுயமுயற்சியும் வேண்டும். பிறர் உதவியை எதிர்பார்த்து வாழக்கூடாது.

## படிவம் 2

1. அடாது செய்பவன் படாது படுவான்

   தகாத செயல்களைச் செய்பவர்கள் அதற்குரிய தண்டனைகளைப் பெற்றே தீருவர்.

2. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்

   ஒருவர் இளமையில் கைகொள்ளும் பழக்கவழக்கங்கள் அவரின் வாழ்நாள் முழுவதும் இருந்து வரும்.

3. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை

   தன்னிடமுள்ள ஒன்றின் சிறப்பினை உணராமல் பிறிதொன்றின் வெளித்தோற்றத்தில் மயங்கி அதனை உயர்வாகக் கருதுவதால் பயன் கிடையாது.

4. வெள்ளம் வருமுன் அணைபோட வேண்டும்

வாழ்க்கையில் எச்சரிக்கையுடன் செயல்களை மேற்கொண்டால் எதிர்நோக்கும் துன்பங்களையோ இடர்களையோ தவிர்க்கலாம்.

5. மனம் உண்டானால் மார்க்கம் உண்டு

ஒரு செயலை நிறைவேற்றுவதில் நம் மனமும் கவனமும் முழுமையாகப் பதியுமானால் அதனைச் செய்து முடிக்கும் வழிமுறைகளும் தானாகப் பிறக்கும்.

## படிவம் 3

1. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது

நடந்து முடிந்த ஒரு காரியத்தை அல்லது கைவிட்டுப்போன ஒரு பொருளை நினைந்து வருந்திப் பயனில்லை.

2. எறும்பு ஊரக் கல்லும் தேயும்

தொடர்ந்து ஒரு செயலைச் செய்து வந்தால் எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் நாளடைவில் மிகவும் எளிதாகி விடும்.

3. நிழலின் அருமை வெயிலில் தெரியும்

ஒரு பொருளின் அல்லது ஒருவரின் அருமை, அப்பொருளோ அவரோ இல்லாத போதுதான் வெளிப்படும்.

4. ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு

எச்செயலைச் செய்தாலும் தன் நோக்கத்தில் வெற்றி பெறுவதிலேயே கருத்தைச் செலுத்த வேண்டும்.

5. பதறாத காரியம் சிதறாது

நிதானத்துடன் செய்யப்படும் ஒரு செயல் சிறப்பாக முடிவு பெறும்.

## படிவம் 4

1. அள்ளாது குறையாது இல்லாது பிறவாது

ஒன்று நடைபெறாமல் மக்கள் அதைப்பற்றிப் பேசமாட்டார்கள்.

2. ஒரு காசுப் பேணின் இரு காசு தேறும்

ஒவ்வொரு காசையும் கவனத்துடன் சேர்த்துவந்தால் நாளடைவில் பெருந்தொகையாகிவிடும்.

3. கடுகு சிறுத்தாலும் காரம் போகாது

கடுகு அளவில் சிறிதானாலும் அதனிடம் இயற்கையாகவே இருக்கின்ற காரம் போகாது. அதுபோல சிலர் உருவத்தில் சிறிதாக இருந்தாலும் ஆற்றல் மிக்கவர்களாக இருப்பார்கள்.

4. ஒற்றுமையில்லாக் குடும்பம் ஒருமிக்கக் கெடும்

குடும்ப உறுப்பினர்கள் ஒற்றுமையோடு செயல்படாவிட்டால் அழிவுக்கு வழிவகுத்து விடும்.

5. கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவு

நாம் கற்றறிந்தது மிகச்சிலவே; இன்னும் கற்க வேண்டியவை நிறைய உள்ளன.

6. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

உடல் நலத்தோடு வாழ்வதே வாழ்க்கையில் ஒருவர்க்குக் கிடைத்த பெரும்பேறாகும்.

7. நிறைகுடம் தளும்பாது

நிரம்பக் கற்றவர்கள் அதனை வெளிப்படுத்தாமல் அமைதியாகவும் ஆரவாரமின்றியும் நடந்துகொள்வர்.

8. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்

கிடைக்கும் வாய்ப்பைப் முழுமையாகப் பயன்படுத்தி, தனக்கு வேண்டியதைச் சாதித்துக்கொள்ளுதல் வேண்டும்.

9. இளமையிற் கல்வி சிலைமேல் எழுத்து

இளமைப் பருவத்தில் கற்கப்படும் கல்வி சிலையில் பொறிக்கப்பட்ட எழுத்துப் போல் மனத்தில் அழியாமல் நிலைத்திருக்கும்.

10. குந்தித் தின்றால் குன்றும் மாளும்

உழைக்காமல் வீணில் உண்டு களிப்போரின் பெருஞ்செல்வம் நாளடைவில் அழிந்துபோகும்.

## படிவம் 5

1. அவனன்றி ஓரணுவும் அசையாது

உலகமும் அதிலுள்ள உயிர்கள் அனைத்தும் இறைவனின் பேராற்றலினாலேயே இயங்குகின்றன.

2. சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்

நமக்குத் தேவையான செல்வம், அறிவு, அனுபவம் போன்றவற்றை முன்கூட்டியே பெற்றிருந்தால்தான் அவை நம் தேவைக்கு உதவும்.

3. தர்மம் தலை காக்கும்

நாம் பிறருக்குச் செய்கின்ற அறம், நமக்குத் துன்பம் வருங்கால் நம்மைக் காத்து நிற்கும்.

4. பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்

சிறந்த பண்புடையவரோடு சேரும் ஒருவர் அப்பண்பாளரின் தன்மைகளைப் பெற்று விளங்குவர்.

5. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

முன்னர் நாம் செய்த செயலின் பலனைப் பின்னர் நாம் அடைவது உறுதியாகும். நன்மை செய்யின் நன்மை விளையும்; தீமை செய்யின் தீமை விளையும்.

6. தன் உயிரைப்போல் மன்னுயிரையும் நினை

நாம் நம் உயிரை எவ்வாறு போற்றிப் பாதுகாக்கின்றோமோ, அவ்வாறே உலகில் உள்ள எல்லா உயிர்களையும் மதிக்க வேண்டும்.

7. துணை போனாலும் பிணை போகாதே

நம்மிடம் உதவி கேட்கும் ஒருவருக்கு உதவுவதில் தவறில்லை. ஆனால், அவர் உதவி பெறும் பொருட்டுப் பிறரிடம் அவருக்காகப் பிணையாளியாக இருக்கக்கூடாது.

8. மின்னுவதெல்லாம் பொன்னல்ல

வெளித்தோற்றத்தைக் கண்டு ஒன்றைச் சிறந்ததென எண்ணி ஏமாந்துவிடக்கூடாது.

9. மனக்கவலை பலக் குறைவு

கவலைமிக்க மனத்தை உடையவரின் உடல் சோர்வடைவதால் ஒரு செயலை முனைப்புடன் செய்ய இயலாது. ஆகவே, மனக்கவலை உடையவர் வலுவிழந்தவராகவே கருதப்படுவர்.

10. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்

அறிவிலும் ஆற்றலிலும் சிறந்து விளங்கும் மூத்தவர்களின் அறிவுரை கேட்டு நடப்பது நன்மை பயக்கும்.

## செய்யுள்

*புகுமுக வகுப்பு*

**மூதுரை**

1. மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன் தேசமல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு

ஒரு நாட்டின் மன்னனைவிடக் கற்றறிந்தவனே சிறந்தவனாகக் கருதப்படுகின்றான். ஏனெனில், அம்மன்னனுக்கு அவன் நாட்டில் மட்டுமே சிறப்புக் கிட்டும். ஆனால், கற்றறிந்தவர்கள் செல்லுகின்ற இடத்திலெல்லாம் சிறப்புப் பெறுவர்.

*படிவம் 1*

**திருமுறை**

1. விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியன்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே

விறகில் தீயும், பாலில் நெய்யும் மறைந்திருப்பது போல மிகப்பெரிய மாணிக்கத்தைப் போன்ற பேரொளியாகிய இறைவன் எங்கும் எதிலும் மறைந்துள்ளான். அவன்பால் உறவுக்கோலை ஊன்றி, உணர்வென்னும் கயிற்றினால் பாலைக் கடையும்போது, நெய் வெளிப்படுவது போல வைராக்கியத்தோடு பக்தி செலுத்தினால் இறை அருள் வெளிப்பட்டுத் தோன்றும்.

**மூதுரை**

2. நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை

நெற்பயிர்கள் செழித்து வளர வாய்க்கால் வழி பாய்ச்சப்படும் நீரானது நெற்பயிர்களை மட்டும் சேராமல் அங்குள்ள புற்களுக்கும் போய்ச் சேருகின்றது. இதனால், நெல்லோடு புல்லும் பயனடைகின்றது. அது போன்று இவ்வுலகில் வாழும் நல்லவர் ஒருவருக்காகப் பெய்யும் மழை அனைத்து உயிரினங்களுக்கும் பாகுபாடின்றி நன்மை அளிக்கிறது.

*படிவம் 2*

1. **நாலடியார்**

பாலோடு அளாயநீர் பாலாகும் அல்லது
நீராய் நிறந்தெரிந்து தோன்றாதாம் - தேரின்
சிறியார் சிறுமையும் தோன்றாதாம் நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து

பாலுடன் கலந்த நீர், தனித்து நீராகத் தோன்றுவதில்லை. அந்த நீரும் பாலைப் போன்றே இருக்கும்; தோன்றும். அதனைப் போன்றே, நல்ல குணங்களையுடைய பெரியோருடன் சேர்ந்திருப்பதன்வழி நம்மிடமுள்ள குறைகளும் சிறுமைகளும் வெளிப்படாது. நாமும் சிறந்த மனிதர்கள் போன்று தோன்றலாம். இத்தகைய பழக்கம் நாளடைவில் நம் குறைகளைப் போக்கி, நற்குணங்கள் நம்மை வந்து சேர வைக்கும்.

2. **நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம்**

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக - செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே யென்று

இறைவனின் அருளைப் பெறத் தடையாக உள்ள துன்பங்கள் நீங்க பூமியை அகல் விளக்காகவும் கடலை அகல் விளக்குக்கு நெய்யாகவும் சூரியனை விளக்கின் சுடரொளியாகவும் பாவித்து ஒளி வீசும் சக்கரத்தைக் கையில் ஏந்திய திருமாலின் திருவடிகளுக்குப் பாமாலையைச் சூட்டுகிறேன்.

*படிவம் 3*

1. **அறநெறிச்சாரம்**

எப்பிறப் பாயினும் ஏமாப் பொருவற்கு
மக்கட் பிறப்பில் பிறிதில்லை - அப்பிறப்பில்
கற்றலும் கற்றவை கேட்டலும் கேட்டதன்கண்
நிற்றலும் கூடப் பெறின்

உலகின் எல்லாப் பிறப்புகளையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் மனிதப் பிறப்பைவிடச் சிறந்த பிறப்பு வேறொன்றுமில்லை. அத்தகைய சிறப்பு வாய்ந்த பிறப்பில் கற்கவேண்டியவற்றைக் கற்க வேண்டும். கற்றறிந்த அறிஞர்களின் அரிய கருத்துகளைக் கேட்க வேண்டும். கேட்ட கருத்துகளின்படி வாழ்க்கையில் நடக்கவும் வேண்டும். இவ்வாறு செய்வதே மனிதப் பிறவியின் பயனை அடைய வழிவகுக்கும்.

## 2. திருவருட்பா

இயற்கையுண்மை வடிவினரே அணையவாரீர்
எல்லாஞ்செய் வல்லவரே அணையவாரீர்
இயற்கைவிளக் கத்தவரே அணையவாரீர்
எல்லார்க்கு நல்லவரே அணையவாரீர்
இயற்கையின்ப மானவரே அணையவாரீர்
இறைமையெலா முடையவரே அணையவாரீர்
இயற்கைநிறை வானவரே அணையவாரீர்
என்னுடைய நாயகரே அணையவாரீர்

இறைவன் இயற்கையே உருவானவர்; உண்மைப் பொருளாகவும் விளங்குகின்றார்; அனைத்தையும் (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் முதலான ஐந்தொழில்கள்) செய்யும் ஆற்றல் உடையவர்; உயிர்கள் அறிவு விளக்கம் பெறச்செய்பவர்; விருப்பு வெறுப்பு இல்லாமல் எல்லார்க்கும் நல்லவராக இருப்பவர்; உயிர்களுக்கு இன்பத்தை அளிப்பவர்; உயிர்களுக்குத் தலைமை தாங்கும் பண்பை உடையவர்; பஞ்சபூதங்களாகக் காட்சி தருபவர். அனைத்துமாக இருக்கின்ற இறைவன் அருள்புரிய வேண்டும்.

*படிவம் 4*

## 1. விவேக சிந்தாமணி

புத்திமான் பலவா னாவான் பலமுளான் புத்தி யற்றால்
எத்தனை விதத்தி னாலு மிடரது வந்தேதீரும்
மற்றொரு சிங்கந் தன்னை வருமுயல் கூட்டிச் சென்றே
உற்றதோர் கிணற்றில் சாயல் காட்டிய வுவமை போல

அறிவுடையவரே பலமுடையவராவார். பலமுள்ளார் அறிவற்றுப்போனால் எவ்வகையிலேனும் அவருக்குத் துன்பம் வந்தே தீரும். சிறுமுயல் ஒன்று தன் அறிவுடைமையினால் பலம் வாய்ந்த சிங்கம் ஒன்றை அழைத்துச் சென்று அதனுடைய பிம்பத்தையே கிணற்றினுள் காட்டி அதைக் கொன்றதைப் போன்று பலமற்றவர் தன் அறிவுக்கூர்மையால் பலமுள்ளவர்களையும் வெல்லலாம்.

**நளவெண்பா**

## 2. நளனது நல்லாட்சி

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை அறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான் – மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடற்பருந்தும்
ஒரு கூட்டில் வாழ உலகு

குளிர்ந்த நிலவு போன்ற வெண்கொற்றக் குடை நிழலில் வீற்றிருக்கின்ற நளமன்னன் மகரந்தப்பொடி சிந்துகின்ற மலர்மாலையை அணிந்தவன் ஆவான். அவன் சிறந்த அறங்கள் நிலைத்து நிற்கும் வகையில் தன் நாட்டைத் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் ஆண்டு வந்தான். அவன் நாட்டில் பெண்கள் பாலும் பழமும் ஊட்டி வளர்க்கும் மென்மைக் குணமுடைய பச்சைக்கிளியும் போராட்ட குணமுடைய வலிய பருந்தும் பகைமை நீங்கி ஒரே கூட்டிற்குள் வாழும் நிலை உள்ளது.

## 3. தமயந்தி வருகை

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள் – மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று

மன்னர்களின் தாமரை போன்ற கண்கள் அகன்று விரிந்து நோக்க, திருமகள் போன்ற அழகுபடைத்த தமயந்தி மண்டபத்தினுள் சென்று நுழைந்தாள். மின்னல் நிறம் போன்று ஒளிவிடும் சிவந்த கால்களையும் வெள்ளைச் சிறகுகளையுடைய அன்னப்பறவை செந்தாமரை மலர்கள் மலர்ந்துள்ள தடாகத்தில் செல்வதுபோல் தமயந்தி சென்றாள்.

**சிலப்பதிகாரம்**

## 4. கற்புத் தெய்வம்

என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்;
கடுங்கதிர் வெம்மையில் காதலன் தனக்கு
நடுங்குதுயர் எய்தி, நாப்புலர வாடித்,
தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி;
இன்துணை மகளிர்க்கு இன்றி யமையாக்
கற்புக் கடம்பூண்ட இத்தெய்வம் அல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்!

இங்கு என்னோடு வந்துள்ள இளங்கொடி போன்ற இவளுடைய அழகிய சிறிய அடிகளை இதற்கு முன்னர் நிலமகளும் அறிந்திருக்கவில்லை. வெயிலின் கொடுமையால் துன்பமுற்ற தன் கணவன் பொருட்டு நடுங்கத்தக்கத் துயரத்தை அடைந்து, நாவும் உலர்ந்துபோக வாட்டமுற்றுத் தனது வழிநடைத் துன்பத்தையும் சிறிதும் உணராதப் பூங்கொடி போன்றவள் இவள். மேலும், கணவர்க்கு இனிய துணையாக விளங்கும் பெண்களுக்கு இன்றியமையாததான கற்பைக் கடமையாக மேற்கொண்ட இவளைப் போன்ற பொலிவினையுடைய தெய்வத்தை நான் அறிந்ததில்லை.

*படிவம் 5*

**கம்ப இராமாயணம்**

1. **இயற்கை இன்பம்**

குயிலினம் வதுவை செய்ய,
கொம்பிடைக் குனிக்கும் மஞ்ஞை
அயில்விழி மகளிர் ஆடும்
அரங்கினுக்கு அழகு செய்ய,
பயில்சிறை அரச அன்னம்
பன்மலர் பள்ளி நின்றும்
துயிலெழ, தும்பி காலைச்
செவ்வழி முரல்வ சோலை

குயிற்கூட்டம் இணைந்திருக்கவும் வேல் போன்ற கூர்விழியுடைய நாட்டியப் பெண்கள் ஆடலரங்கத்திற்கு அழகு செய்ய ஆடுவதைப் போன்று மயில்கள் நாட்டியமாடவும் அரச அன்னப்பறவையானது தாமரை மலர்களினின்றும் துயில் எழவும் அக்காலை வேளையில் வண்டுகள் உதயராகம் பாடவும் உடைய சோலை.

2. **மணிமேகலை – பாத்திரம் பெற்ற காதை (பசியின் கொடுமை)**

குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
..................................................................
பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர்
இசைச்சொல் அளவைக் கென்நா நிமிராது
..................................................................
..................................................................
ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே

பசிப்பிணியானது ஒருவரின் குடிப்பிறப்பினால் வந்த தகுதியை அழித்துவிடும்; தூய்மையான இயல்புகளைச் சிதைத்துவிடும்; வாழ்வுக்குப் பற்றுக்கோடாகப் பற்றிக்கொண்ட கல்வியாகிய பெரிய தெப்பத்தையும் போக்கிவிடும். அணிகலனாய் அமைந்த நாணத்தைப் போக்கும் மாட்சிமை உடைய அழகைக் குலைக்கும். எனவே, அத்தகைய கொடுமை நிறைந்த அந்தப் பசி என்னும் பிணியைப் போக்க வேண்டும். அங்ஙனம் போக்கியவர்களைப் பற்றி எழும் புகழ்மொழிகளை அளவிட்டுக் கூறுதற்கு என் நாவும் நிமிராது. அத்தனை அளவிறந்த புகழுடைய செயல் அதுவாகும்.

மேலும், அறம் என்னும் சொல்லின் உண்மையான பொருளை நீ அறிந்துகொள்ள வேண்டும். கைம்மாறு செய்யும் சக்தி உடையவர்களுக்கு ஒரு பொருளைக் கொடுப்பவர் அறம் செய்பவராகார். அவர் அறத்தினை விற்பவராவார். மாறாக, கைம்மாறு செய்வதற்கும் இயலாத ஏழைகளின் பெரும் பசிப்பிணியைப் போக்குபவரே உண்மையான அறம் செய்பவர்களாவர். மெய்ந்நெறியோடு கூடிய வாழ்க்கை என்பதும் பசித்தோருக்குக் கொடுத்து மகிழும் அத்தகையோரின் வாழ்க்கையேயாகும். அணுச்செறிந்த இந்த உலகத்திலே வாழ்பவர்களுக்கு எல்லாம் உணவு கொடுத்தவர் எவரோ, அவர்தாம் உயிர் கொடுத்தவரும் ஆவார்.

## 3. **நன்னூல்**

### **மாணாக்கனது வரலாறு**

அன்ன மாவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்

அன்னம், பாலையும் நீரையும் வேறு பிரித்துப் பாலை மாத்திரம் அருந்தும்; அதைப்போல தலை மாணாக்கர் குணத்தையும் குற்றத்தையும் வெவ்வேறாகப் பிரித்துக் குணத்தை மட்டும் கொள்வர். பசுவானது மிகுந்த புல் உள்ள இடத்தைக் கண்டால் அப்புல்லை வயிறு நிறைய மேய்ந்து பின்னர் ஓரிடத்திலிருந்து அதைச் சிறிது சிறிதாக வாய்க்குக் கொணர்ந்து அசைப்போடும். அதைப்போல தலை மாணாக்கர் மிகுந்த கல்வி கற்ற ஆசிரியரைக் கண்டால் அக்கல்வியைத் தம் உள்ளம் நிறையக் கேட்டுக்கொண்டு பின்பு ஓரிடத்தில் போயிருந்து சிறிது சிறிதாக நினைவிற்கொண்டு வந்து சிந்தித்துக் கல்வி பெறுவர்.

மண், உழவர் வருந்திச் செய்யும் முயற்சிக்கு ஏற்ப விளைவைத் தரும்; அதைப்போல இடைமாணாக்கர் ஆசிரியர் கற்பிக்கும் முயற்சி அளவுக்கு ஏற்றபடி கல்வியைப் பெறுவர். கிளி தனக்குக் கற்பித்ததைச் சொல்வதல்லாமல் பிறவற்றைக் கூறாது; அதைப் போல இடை மாணாக்கர் தமக்குக் கற்பித்தவற்றையன்றிப் பிறவற்றைச் சொல்லமாட்டார்.

இல்லிக்குடம் நீரை வார்க்கும் போதெல்லாம் வெளியே ஒழுகவிடும்; அதைப்போல கடைமாணாக்கர் நூற்பொருளைக் கற்பிக்கும்தோறும் மறந்துவிடுவர். ஆடானது, ஒரு

செடியிலே தழை நிறைந்திருந்தாலும் வயிறு நிறைய மேயாது, பல செடிதோறும் போய் மேயும். அதைப்போல கடைமாணாக்கர் ஓராசிரியரிடத்தே மிகுந்த கல்வி இருந்தாலும் புலமை நிறையக் கற்றுக்கொள்ளாது ஆசிரியர்கள் பலரிடம் போய்ப் பாடம் கேட்பர். எருமை, குளத்து நீரைக் கலக்கியபின் அதை அருந்தும். அதைப்போல கடைமாணாக்கர் ஆசிரியரை வருத்திக் கல்வியைப் பெறுவர். பன்னாடையானது, தேன் முதலியவற்றைக் கீழே ஒழுகவிட்டு அவற்றிலுள்ள அழுக்கை மட்டும் நிறுத்திக்கொள்ளும். அதைப்போல கடைமாணாக்கர் நல்ல பொருளை மறந்துவிட்டுத் தீயப் பொருளையே மனத்துள் கொள்வர்.

*இணைமொழி*

## புகுமுக வகுப்பு

1. அருமை பெருமை - சிறப்பு / உயர்வு / மேன்மை
2. கல்வி கேள்வி - கல்வி அறிவு / படிப்பு
3. நோய் நொடி - பிணி, வியாதி, நலக்கேடு
4. மிச்சம் மீதி - எஞ்சியது
5. ஆதி அந்தம் - தொடக்கமும் முடிவும்

### *படிவம் 1*

1. அகமும் புறமும் - மன உணர்வும் வெளித்தோற்றமும் / உள்ளேயும் வெளியேயும்
2. உயர்வு தாழ்வு - பாகுபாடு / வேறுபாடு
3. கள்ளங்கபடு - வஞ்சக எண்ணம்
4. தங்கு தடை - தடைகள் / இடையூறு / குறுக்கீடு
5. பேரும் புகழும் - கீர்த்தி / புகழ் / மாண்பு / மாட்சி

### *படிவம் 2*

1. அண்டை அயலார் - அக்கம் பக்கத்தார்
2. சட்ட திட்டம் - விதிமுறைகள்
3. உள்ளும் புறமும் - எண்ணத்திலும் செயலிலும் / உள்ளேயும் வெளியேயும்
4 மலையும் மடுவும் - உயர்ந்த நிலமும் தாழ்ந்த நிலமும்
5. நாணிக்கோணி - மிகவும் வெட்கப்பட்டு

### *படிவம் 3*

1. இன்ப துன்பம் - சுக துக்கம் / மகிழ்வும் துயரமும்
2. ஊண் உறக்கம் - உணவும் தூக்கமும்
3. சீரும் சிறப்பும் - மேன்மை / உன்னத நிலை / ஏற்றம் மிகுந்த
4. பற்றும் பாசமும் - ஆழ்ந்த அன்பு
5. வரவு செலவு - வருமானமும் செலவும்

## <u>மரபுத்தொடர்</u>

### *புகுமுக வகுப்பு*

1. கண்ணும் கருத்தும் - முழுக் கவனத்துடன்
2. வாழையடி வாழை - தலைமுறை தலைமுறையாக
3. வெட்டிப் பேச்சு - வீண் பேச்சு / பயனற்ற பேச்சு
4. முட்டுக்கட்டை - தடை / தடங்கல்
5. உச்சிக் குளிர்தல் - பெரும் மனமகிழ்ச்சி அடைதல்

### *படிவம் 1*

1. அரைப்படிப்பு - முழுமையற்ற படிப்பு / நிரம்பாக் கல்வி
2. ஆணித்தரம் - உறுதி
3. ஒரு காலில் நிற்றல் - விடாப்பிடியாக நிற்றல் / பிடிவாதமாக இருத்தல்
4. செவி சாய்த்தல் - உடன்படுதல் / இணங்குதல் / இசைதல்
5. கண்ணும் கருத்துமாக - முழுக்கவனத்துடன்

### *படிவம் 2*

1. அளவளாவுதல் - கலந்துபேசுதல் / கூடிப்பேசுதல்
2. இடித்துரைத்தல் - கண்டித்துக் கூறுதல்
3. எள்ளளவும் - சிறிதளவும் / கிஞ்சிற்றும்
4. கையாலாகாதவன் - எவ்வேலையையும் செய்யத் திறமையற்றவன்
5. பாட்டு வாங்குதல் - திட்டுப் பெறுதல் / ஏசப்படுதல்

### *படிவம் 3*

1. அரக்கப் பரக்க - அவசரமும் பதற்றமுமாக
2. ஈயாடவில்லை - அவமானத்தால் ஏற்படும் மகிழ்ச்சியின்மை
3. ஏட்டிக்குப் போட்டி - எதிருக்கெதிராகச் செயல்படுதல் / விதண்டாவாதம்
4. வலைவீசுதல் - வசப்படுத்த முயலுதல் / தீவிரமாகத் தேடுதல்
5. கங்கணம் கட்டுதல் - உறுதி பூணுதல்

### *படிவம் 4*

1. அண்டப்புரட்டன் - பெரும்புளுகன் / பெருந்தீயன்
2. ஆசாரக்கள்ளன் - ஒழுக்கமுள்ளவன் போல் நடிப்பவன்
3. உச்சிக் குளிர்தல் - பெருமகிழ்ச்சி அடைதல்
4. இரண்டுங்கெட்டான் - நன்மை தீமை அறியாதவன் / தீர்க்கமான முடிவு எடுக்க முடியாதவன்
5. ஈவிரக்கம் - மனக்கசிவு / கருணை
6. காதில் பூவைத்தல் - முட்டாளாக்குதல் / ஏமாற்றுதல்
7. முட்டுக் கட்டை - தடை / தடங்கல்
8. தொன்று தொட்டு - நெடுங்காலமாய் / ஆதிகாலத்திலிருந்து
9. கைநனைத்தல் - பிறர் இல்லத்தில் விருந்துண்ணல்
10. வெள்ளிடைமலை - மிகவும் வெளிப்படையாகத் தெரிவது / தெளிவாகப் புலனாவது

### *படிவம் 5*

1. கருணைக் கடல் - இரக்கம் மிகுந்தவர் / மிகவும் பரிவுமிக்கவர்
2. இனிப்புக் காட்டுதல் - ஆசை வார்த்தை கூறுதல்
3. ஒத்துப் பாடுதல் - பிறர் கூறுவதற்கெல்லாம் ஆமோதித்தல்
4. கயிறு திரித்தல் - இல்லாததை இருப்பதாகக் கூறுதல்
5. கானல் நீர் - நிறைவேறாத எண்ணம்
6. தண்ணீர் காட்டுதல் - ஏமாற்றுதல் / அலைக்கழித்தல்
7. நெளிவு சுளிவு - நுணுக்கங்கள் / யுக்தி
8. கரைத்துக் குடித்தல் - ஒன்றைப்பற்றி முழுமையாகக் கற்றல், ஆழமாகக் கற்றல்
9. கை கூடுதல் - நிறைவேறுதல்
10. விழலுக்கு இறைத்தல் - வீணாகப் பாடுபடுதல்

<u>உவமைத்தொடர்</u>

## *புகுமுக வகுப்பு*

1. பூவும் மணமும் போல
   - விட்டுப் பிரியாமை / சேர்ந்தே இருத்தல்

2. சூரியனைக் கண்ட பனி போல
   - துன்பம் நீங்குதல்

3. புற்றீசல் போல
   - கூட்டங்கூட்டமாக

4. தூண்டில்காரனுக்குத் தக்கை மேல் கண் போல
   - தன் செயலில் கவனமாயிருத்தல் / குறியாயிருத்தல்

5. குன்றின் மேலிட்ட விளக்கு போல
   - எல்லாராலும் அறியப்பட்ட, உணரப்பட்ட ஒருவரின் திறமை

*படிவம் 1*

1. உள்ளங்கை நெல்லிக்கனி போல
   - மிகவும் தெளிவாகத் தெரிதல்

2. காந்தம் இரும்பைக் கவர்வது போல
   - ஒன்றைத் தன் வசம் கவர்ந்திழுத்தல்

3. சேற்றில் முளைத்த செந்தாமரை போல
   - தாழ்ந்த இடத்திலும் உயர்ந்தோர் தோன்றுவர்

4. பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போல
   - எதிர்பார்த்ததை விட எளிதாக, இனிய முறையில் நடந்தேறுதல் / இன்பத்துக்குமேல் இன்பம்

5. வேலியே பயிரை மேய்ந்தாற்போல
   - காக்க வேண்டியவரே துரோகம் செய்தல்

*படிவம் 2*

1. கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல
   - யாரைச் சந்திக்கவேண்டும் என்று நினைக்கிறோமோ அவரே எதிரில் வருதல்

2. கண்ணினைக் காக்கும் இமை போல
   - மிகவும் பாதுகாப்பாக

3. தாயைக் கண்ட சேயைப் போல
   - பிரிவுக்குப் பிறகு சந்திப்பதால் ஏற்படும் மகிழ்ச்சி

4. மணியும் ஒலியும் போல
   - இணைந்தே இருப்பது / விட்டுப் பிரியாமை

5. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல
   - துன்பத்துக்குமேல் துன்பம்

*படிவம் 3*

1. இருதலைக் கொள்ளி எறும்பு போல
   - எந்தப் பக்கமும் சார முடியாத இக்கட்டான நிலை

2. ஊமை கண்ட கனா போல
   - வெளியே சொல்ல முடியாமை

3. குடத்திலிட்ட விளக்கு போல
   - திறமை வெளியே தெரியாமை

4. தீயும் பயிருக்குப் பெய்யும் மழை போல
   - தக்க சமயத்தில் கிடைக்கும் உதவி

5. நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தது போல
   - உயர்வான ஒன்றிற்கு மெல்ல மெல்ல கேடு விளைவித்தல்

*படிவம் 4*

1. குன்றின் மேலிட்ட விளக்கு போல
   - எல்லாராலும் அறியப்பட்ட, உணரப்பட்ட ஒருவரின் திறமை

2. விழலுக்கு இறைத்த நீர் போல
   - பயனற்ற உழைப்பு

3. பசுமரத்தாணி போல
   - மனத்தில் ஆழமாகப் பதிதல்

4. மாலுமி இல்லாத கப்பல் போல
   - முறையான வழிகாட்டல் இல்லாமை / தலைமைத்துவம் இல்லாமை

5. அழகுக்கு அழகு செய்வது போல
   - அழகான ஒன்றுக்கு மேலும் அழகு சேர்த்தல்

*படிவம் 5*

1. சிறகு இழந்த பறவை போல
   - செயல் இழந்து நிற்கும் நிலை

2. நுனிப்புல் மேய்ந்தாற்போல்
   - ஒன்றைப் பற்றி மேலோட்டமாக மட்டும் தெரிந்து கொள்ளுதல்

3. நீறு பூத்த நெருப்பு போல
   - உணர்ச்சிகளை (சினம், பகை) வெளியே காட்டிக்கொள்ளாமை

4. கொழு கொம்பற்ற கொடி போல
   - ஆதரவு இல்லாத நிலை

5. இலவு காத்த கிளி போல
   - உறுதியாகக் கிடைக்குமென்று காத்திருந்து ஏமாற்றமடைதல்

## <u>இரட்டைக்கிளவி</u>

ஒரே சொல் இரண்டு முறை அடுக்கி அல்லது தொடர்ந்து இரட்டைச் சொற்களாக வந்து பொருள் தருவதற்கு இரட்டைக் கிளவி எனப் பெயர். இதைப் பிரித்துப் பார்த்தால் பொருள் தராது. இரண்டு சொற்களும் இணைந்து வந்தால்தான் பொருளுண்டு. இது பொதுவாக ஒரு நிலையை அழுத்திச் சொல்லவும் ஒலிக் குறிப்பைக் காட்டவும் விரைவைக் குறிக்கவும் பயன்படும்.

### *புகுமுக வகுப்பு*

1. சரசர - காய்ந்த இலை (சருகு) ஒன்றோடொன்று உரசும் போது அல்லது மிதிபடும் போது உண்டாகும் ஒலி / உரசல் சத்தம்.

   எ.கா : காய்ந்த இலைகளின் ஊடே பாம்பு **<u>சரசர</u>**வென்று ஊர்ந்து செல்கிறது

2. கிடுகிடு - அதிர்வு / நடுக்கம், விரைவு (விலை)

   எ.கா : நிலநடுக்கத்தின் போது கட்டடங்கள் **<u>கிடுகிடு</u>**வென ஆட்டங்கண்டன.

3. திருதிரு - மருட்சியினால் விழித்தல்

   எ.கா : கையும் களவுமாகப் பிடிபட்டச் சிறுவன் **<u>திருதிரு</u>**வென விழித்தான்.

4. மடமட - விரைந்து சரிதல்

   எ.கா : அக்கட்டடம் சில நொடிக்குள் <u>மடமட</u>வென இடிந்து விழுந்தது.

5. தகதக - செந்நிறமாக மின்னுகின்ற ஒளி / கொழுந்துவிட்டு எரிதல்

   எ.கா : காலைக் கதிரவனின் ஒளிபட்டுக் கடல்நீர் **<u>தகதக</u>**வெனக் காட்சியளித்தது.

#### *படிவம் 1*

1. சலசல - நீர் ஓடும் ஓசை

   எ.கா : என் வீட்டின் பின்புறம் இருக்கும் ஆற்றில் நீர் **<u>சலசல</u>**வென ஓடுகிறது.

2. சடசட - கடுமையான ஓசை

எ.கா : கடுங்காற்று வீசியதால் மாமரத்தின் கிளை **<u>சடசட</u>**வென முறிந்து விழுந்தது.

3. பளபள - கண்ணைக் கூசச் செய்யும் ஒளி

எ.கா : தாயார் வாங்கி வந்த வெள்ளிப்பாத்திரங்கள் **<u>பளபள</u>**வென மின்னுகின்றன.

4. மடமட - விரைந்து சரிதல்

எ. கா : மலைச்சரிவில் கட்டப்பட்ட அவ்வீடு மண்சரிவினால் **<u>மடமட</u>**வெனச் சரிந்தது.

5. பரபர - அவசர அவசரமாகச் செய்தல்

எ.கா : தாமதமாகியதால், உறவினர் திருமணத்திற்கு என் வீட்டார் <u>பரபர</u>வெனக் கிளம்பினர்.

*படிவம் 2*

1. கலகல - வாய்விட்டுச் சிரிக்கும் ஒலி

எ.கா : இளைய கலைவாணரின் நகைச்சுவையைக் கேட்டு அமுதா **<u>கலகல</u>**வெனச் சிரித்தாள்.

2. தகதக - செந்நிறமாக மின்னுகின்ற ஒளி / கொழுந்துவிட்டு எரிதல்
எ. கா : அம்மனுக்குச் சூட்டப்பட்ட தங்க நகைகள் **<u>தகதக</u>**வென மின்னின.

3. துருதுரு - எப்பொழுதும் துடிப்பாகச் செயல்படுதல் (குழந்தைகள்)

எ.கா : **<u>துருதுரு</u>**வென அங்குமிங்கும் ஓடியாடிக் கொண்டிருக்கும் குழந்தைகளைக் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

4. சிடுசிடு - சினக்குறிப்புக் காட்டுதல்

எ.கா : தனக்குப் பிடிக்காத மருமகளிடம் அந்த மாமியார் எப்பொழுதும் **<u>சிடுசிடுவென</u>** எரிந்து விழுவார்.

5. தரதர - தரையோடு இழுக்கும்போது எழும் ஓசை

எ.கா : கையும் களவுமாய்ப் பிடிப்பட்ட அத்திருடனைப் பொதுமக்கள் **<u>தரதர</u>**வெனக் காவல் நிலையத்திற்கு இழுத்துச் சென்றனர்.

*படிவம் 3*

1. கிடுகிடு - அதிர்வு / நடுக்கம் / விரைவு (விலை)

   எ. கா : ஒரு பொருளின் உற்பத்திக் குறைந்து, தேவை அதிகரித்தால் அதன் விலை **<u>கிடுகிடு</u>**வென உயரும்

2. நறநற - சினத்தால் பல்லைக் கடிக்கும் ஓசை

   எ.கா : இராமன் மீது கோபம் கொண்ட இராவணன், தன் பற்களை **<u>நறநற</u>**வெனக் கடித்துக் கொண்டே போருக்குத் தயாரானான்.

3. கடகட - விரைவாகச் செய்தல்

   எ.கா : ஆசிரியர் போதித்த செய்யுளை மாணவன் மனனம் செய்து **<u>கடகட</u>**வென ஒப்புவித்தான்.

4. விறுவிறு - விரைவாக

   எ.கா : வேலை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த அமலா, மழை பெய்யத் தொடங்கியதால் **<u>விறுவிறு</u>**வென வீட்டை நோக்கி நடந்தாள்.

5. தொணதொண - வெறுப்பு உண்டாக்கும்படி ஓயாமல் பேசுவது

   எ.கா : அதிகம் பேச விரும்பாதவர்கள் **<u>தொணதொண</u>**வெனப் பேசிக் கொண்டிருப்பவர்களைக் கண்டு ஒதுங்குவது இயல்பாகும்.

*படிவம் 4*

1. திமுதிமு - பலரோ மிருகங்களோ கூட்டமாகச் செல்லுதல்

   எ.கா : தீப்பிடித்தத் தொழிற்சாலையிலிருந்து தொழிலாளர்கள் **<u>திமுதிமு</u>**வென வெளியேறினர்.

2. தளதள - பயிர் செழிப்பாகக் காணப்படும் நிலை

   எ.கா : நன்கு நீரூற்றி உரமிட்ட மல்லிகைச் செடிகள் **<u>தளதள</u>**வென வளர்ந்திருந்தன.

3. மளமள - வேலையை விரைவாகவும் சுறுசுறுப்பாகவும் செய்தல்

   எ.கா : அல்லி தன் வீட்டு வேலைகளை **<u>மளமள</u>**வென முடித்துக் கொண்டு தொலைக்காட்சியின் முன் அமர்ந்தாள்.

4. சரசர - காய்ந்த இலை (சருகு) ஒன்றோடொன்று உரசுதல் / உரசல் சத்தம்

எ.கா : மணப்பெண் பட்டுச்சேலை **சரசர**க்க மணமேடைக்கு நடந்து வருகிறாள்.

5. தடதட - வன்மையான ஒலியுடன் கூடிய செயல்

எ.கா : தன் அறைக்கதவை யாரோ **தடதட**வென்று தட்டும் ஓசை கேட்டுச் சுடர்மதி திடுக்கிட்டாள்.

*படிவம் 5*

1. வழவழ - கருத்துத் தெளிவின்றிப் பேசுதல்

எ.கா : கருத்துகளை நேரடியாகச் சொல்லாமல் **வழவழ**வெனப் பேசிய அச்சொற்பொழிவாளரின் பேச்சு மக்களைக் கவரவில்லை.

2. திருதிரு - மருட்சியினால் விழித்தல்

எ.கா : திருவிழாவில் காணாமல் போன அச்சிறுமி, பயத்தால் **திருதிரு**வென விழித்தாள்.

3. வெடவெட- குளிர் அல்லது பயத்தினால் நடுங்குதல்.

எ.கா : மழையில் நனைந்த நளினா குளிரில் **வெடவெட**வென நடுங்கினாள்.

4. நசநச - ஈரத் தன்மை கொண்டிருத்தல்

எ.கா : கடுமையான உடற்பயிற்சிக்குப் பிறகு வியர்வை வெளியாகி என் உடல் **நசநச**வென்றிருந்தது.

5. சிலுசிலு - மென்குளிர் காற்று

எ.கா : கேமரன் மலையில் **சிலுசிலு**வென்று வீசிய காற்று உடலைச் சிலிர்க்கச் செய்தது.

## <u>மேற்கோள் நூற்பட்டியல்</u>


1. கழகப்புலவர் குழு, (1990) **<u>நன்னூல் காண்டிகை உரை</u>** (எழுத்ததிகாரம்), சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை – 108.

2. வரதராசன். மு, (2002) **<u>திருக்குறள் தெளிவுரை</u>**, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-18.

3. முனுசாமி. வீ, (1989) **<u>திருக்குறள் தெளிவுரை,</u>** வானதி பதிப்பகம், சென்னை-17.

4. இராமலிங்கம் பிள்ளை, (1999) **<u>திருக்குறள் எளிய உரை</u>**, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-14.

5. கோவிந்தராசன் . சி. ர, (2002) **<u>நீதி நூல் அறநெறிச்சாரம் மூலமும் உரையும்</u>**, இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை-17.

6. நாராயணசாமி, T.P, (1960) **<u>அறநூற் கொத்து</u>**, மனோன்மணி விலாஸ், கோலாலம்பூர்.

7. பரந்தாமனார் ,அ.கி. (2002) **<u>நல்ல தமிழ் எழுத வேண்டுமா,</u>** பாரி நிலையம், சென்னை-108.

8. கழகப்புலவர் குழு, (1984) **<u>கட்டுரை நண்பன்,</u>** சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை – 108.

9. வேலுசுவாமி.சி, (1996) **<u>பழமொழி விளக்கமும் இலக்கணச் சுருக்கமும்,</u>** திருமகள் வெளியீடு, கோலாலம்பூர்.

10. ஆசிரியர் குழு, (1997) **<u>தற்காலத் தமிழ் மரபுத்தொடர் அகராதி,</u>** மொழி கலாச்சார வளமேம்பாட்டு அறக்கட்டளை, சென்னை-41.

11. ஆசிரியர் குழு, (1996) **<u>இலக்கண லக்கிய விளக்கவுரை</u>**, ஸ்ரீ கோத்தா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, கோலாலம்பூர்.

12. ஆசிரியர் குழு, (2002) **<u>தமிழ் மொழி இலக்கண இலக்கிய வழிகாட்டி நூல்</u>**, துவாங்கு பைனுன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, புக்கிட் மெர்தாஜம்.